மகாவித்துவான்

மே வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களின்

68-ஆவது பிறந்த நாள் விழாக் குழு

விழாக் குழுத் தலைவர் :

திரு. த. சே. உமாபதி, எம். ஏ., எல். டி.

செயலாளர் :

திரு. ப. வே. இலக்குமிபதி

பொருளாளர் :

திரு. வி. சேஷகிரி, எம். ஏ., பி. டி.

உறுப்பினர் :

திரு. டி. செல்வராசன், எம்.
,, அ. இரா. நாராயணசாமி
,, த. பா. சந்திரன்
,, K. சீத்தாபதி
,, நாதன்
குமாரி. ம. பரிமளா
,, சி. சகுந்தலா

விழாவில் பங்கேற்கும் மன்றங்கள்:

தமிழாசிரியர் சங்கம், சென்னை—1.
தமிழ் எழுத்தாளர் சங்கம், சென்னை—5.
மாணவர் மன்றம், சென்னை—1.
சென்னை வேதாந்த சங்கம், சென்னை—2.
தமிழ் வளர்ச்சி மன்றம், சென்னை—1.
கம்பன் மன்றம், சென்னை—2.
சுந்தரர் கல்லூரி, சென்னை—7.
நக்கீரர் கழகம், சென்னை—1.

பதிப்புரை

சிந்தாமணிச் செல்வர், மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை அவர்களின் 68–ஆவது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு இம்மலர் தோன்றுகிறது. முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அரும் பெருந் தமிழ் நூல்களை ஆய்ந்து பதிப்பித்தும், சிறிய பல நூல்களை ஆய்ந்து எழுதி மாணவ, மாணவியர்க்குத் தமிழூட்டியும், தூய தமிழிற் சொற்பொழிவாற்றி மக்களை மகிழ்வித்தும், தமிழ் மொழிக்கு இடையறாது இனிய தொண்டாற்றி வரும் பிள்ளை அவர்களுக்கு இம்மலர் தமிழ் மக்களின் அன்புக் காணிக்கையாகும்.

இம்மலருக்குக் கட்டுரை இதழ்களை அன்புடன் நல்கி அருளிய அறிஞர் பெருமக்களுக்கு எங்கள் அன்பு கனிந்த நன்றியை உரிமைப் படுத்துகிறோம். இம் மலர் உருப்பெறுதற்குப் பல்லாற்றானும் துணைபுரிந்த வேங்கடேசன் அச்சகத்தார்க்கும், 'கேசிபென்' அச்சகத்தார்க்கும், சுகுண பதிப்பகத்தார்க்கும், உருத்திரா பதிப்பகத்தார்க்கும் எங்கள் உளங்கனிந்த நன்றி உரியதாகுக. இத்தகைய மலர்கள் மேலும் பற்பல மலரவேண்டு மென்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

பதிப்பாசிரியர் குழு.

சிந்தாமணிச்செல்வர் — மகாவித்துவான்

மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

அவர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

சீர் பூத்த சென்னையம்பதிக்கு அண்மையிலுள்ள சைதாப்பேட்டைக்கு மேற்பால் திகழும் மேட்டுப்பாளையம் என்னும் சிற்றூரில் துன்முகி ஆண்டு ஆவணித் திங்கள், 1-ஆம் நாள் (31-8-1896) திருவாளர் மே. வீராசாமிப் பிள்ளை அவர்களுக்கும் திருவாட்டி பாக்கியம் அம்மையாருக்கும் தவப் புதல்வராய்த்தோன்றினர் நம் சிந்தாமணிச் செல்வர். கிருஷ்ண ஜயந்தி நன்னாளில் தோன்றிய இவருக்கு வேணுகோபாலன் என்னும் திருப்பெயர் சூட்டப் பெற்றது. பிள்ளை அவர்களின் உடன் பிறந்தவர் எழுவர். அவருள் தமையன்மார் நால்வர்; தமக்கையார் இருவர்; தங்கையார் ஒருவர்.

செல்வச் சரிவு காரணமாக இவருடைய குடும்பம் முதலில் மேட்டுப் பாளையத்தினின்று பல்லவபுரத்துக்கு அண்மையிலுள்ள எருமையூருக்கும், பின்னர்ப் புரசைப்பாக்கத்துக்கும் புடைபெயர நேர்ந்த காரணத்தால் பிள்ளை அவர்கள் இளமையில் கல்வி பயிலும் வாய்ப்புப் பெற்றாரல்லர். கல்வி கற்க வேண்டிய வயதில் சென்னை வேப்பேரி எஸ். பி. ஸி. கே. அச்சகத்தில் அச்சுத் தேய்க்கும் வேலையில் அமர்ந்து மூன்று ரூபாய் ஊதியத்திற்குக் கடுமையாக உழைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பொருட்செல்வி புறக்கணிப்பினும் கலைச்செல்வியின் கடைக்கணிப்பால் இவர் பகல் உழைப்புக்குப் பின்னர், இரவுப் பள்ளியொன்றில் பயின்று ஐந்தாம் படிவத்தில் தேர்ச்சியடைந்தார். ஆனால் ஆறும் படிவம் பயின்று அரசியலார் தேர்வுக்குச் செல்லும் வாய்ப்பின்மையால் அதனோடு இவரது ஆங்கிலக் கல்வி முடிவுற்றது.

பின்னர்ப் பிள்ளையவர்கள் தமக்கு ஆங்கிலம் கற்பித்த வழக்கறிஞர் திரு. T. N. சேஷாசலம் ஐயர் அவர்களின் சொற்படி பேராசிரியர் கா. ரா. கோவிந்தராச முதலியார் அவர்களை நாடித் தனித்தமிழ் பயிலத் தொடங்கினர். கல்வி பயின்றுகொண்டே பிள்ளை அவர்கள் மேற்கொண்ட அலுவல்கள் பலவாம். சிறிது காலம் வேப்பேரி அஞ்சலகத்தில் ஏவலராயும், சிறிது காலம் வழக்கறிஞர் ஒருவரிடம் குமாஸ்தாவாகவும், ஒருவரிடம் தூக்குத்தூக்கியாயும், சிறிது காலம் வழக்கறிஞர் மற்றொருவரிடம் எழுத்தராயும், சிறிது காலம் ஆயுள் ஒப்பந்த அலுவலகம் ஒன்றில் எழுத்தராயும் பணிபுரிந்தார். 1920ல் முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராய்ப் பணியாற்றும் வாய்ப்புப் பிள்ளையவர்களுக்குக் கிடைத்தது. மூன்

றாண்டுகள் கழித்து அதனை விடுத்துப் புரசைப்பாக்கத்திலுள்ள லூத்தரன் மிஷன் பெப்ரீஷியஸ் நடுத்தரப் பள்ளியில் தமிழாசிரியராய்ப் பணியாற்றத் தொடங்கினர். இவர் அங்குச் சென்ற பிறகு அப்பள்ளி உயர்நிலைப் பள்ளியானதுமன்றி இவரும் வித்துவான பரீட்சையில் தேறிப் பட்டதாரியானர். 1924ல் திருமதி ஜானகி அம்மையாரை மணந்து இல்லறத்தை மேற்கொண்டார். பதினேந்து ஆண்டுக்காலம் அப்பள்ளியிற் சிறந்த முறையிற் பணியாற்றிய பிறகு உடல் நலக்கேடு காரணமாக இவர் 1938ல் ஆசிரியத் தொழிலையே விட்டு நீங்கினர்.

ஆசிரியத் தொழிலை விட்ட பின் எழுத்து வேலையும் பதிப்புத் தொழிலும் பிள்ளையவர்களைப் புகழுக்குரியவராக்கின. இவர்கள் பதிப்பித்த பள்ளிப் பாடநூல்கள் பல நூறுகளாகும். இவர்களால் திருத்தம் செய்து பதிப்பிக்கப்பெற்ற இலக்கிய இலக்கண நூல்களும் பலவாம். அவற்றுள் இறையனுர் அகப்பொருள், தொல்காப்பியம் சொல்லதிகாரம் நச்சினர்க்கினியர் உரை, தஞ்சைவாணன் கோவை, அட்டப்பிரபந்தம், சித்தர் ஞானக்கோவை, அரிச்சந்திர புராணம், நளவெண்பா, யாப்பருங்கல விருத்தி என்பன குறிப்பிடத்தக்கவையாகும். இந்நாளில் பதிப்புத் துறை நுட்பங்கள் அனைத்தும் அறிந்துள்ள அறிஞர் சிலருள் இவருக்குச் சிறப்பிடம் உண்டு.

பிள்ளை அவர்கள் இம்முதிர்ந்த வயதிலும் சென்னையிலுள்ள கம்பர் மன்றம், சுந்தரர் கல்லூரி, தமிழியல் மன்றம் ஆகியவற்றில் இலக்கண இலக்கியங்களைக் கற்பிப்பதன் மூலம் ஆண்டு 365 நாளும் கைம்மாறு கருதாது தமிழன்னைக்கு அருந் தொண்டாற்றி வருகின்றார்கள் என்பதனைச் சென்னை நகரம் நன்கு அறியும்.

பிள்ளையவர்கள் தமது நீண்டகால உழைப்பின் பயனைத் தமிழ் இலக்கண இலக்கியங்களில் அறிந்து வைத்துள்ள திட்பநுட்பம் செறிந்த செய்திகள் பற்பல உண்டு. அவை அனைத்தையும் அவர்கள் நூல் வடிவாகவோ, கட்டுரைகள் வாயிலாகவோ வெளியிட்டுத் தமிழ் அன்னைக்கு ஆக்கம் அளிக்கவேண்டு மென்பது தமிழுலகத்தின் ஆவல். பிள்ளையவர்கள் உடல் உரமும், செல்வ வளமும் பெற்றுப் பல்லாண்டு வாழ்ந்திருந்து தமிழ் அன்னைக்குத் தொண்டாற்ற வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனுடைய திருவடி மலர்களை மனமொழிமெய்களாற் சிந்தித்து வாழ்த்தி வந்திக்கின்றேம்!

வாழ்க! மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை.
தழைக்க! அவர்தம் குடி.

மொழித்திறம் பாதுகாத்தல்

[மே. வீ. வே.]

பகுத்தறிவாற் பண்பட்டு விளக்கும் மக்கள் இனத்தை மாண்புறுத்தும் பண்பாடுகளுள் மொழித்திறம் முதன்மையுற்று விளங்குவது தேற்றம். இத்தகு சீரிய நலம் பயக்கும் மொழியைச் செப்பமுற வளர்த்துப் பாதுகாத்தல் மக்கள் ஆற்றும் செயல்களுள் மாண்புறு செயல் எனக் கருதலாம்.

நம் தாய்மொழி தமிழ். இதை நம் முன்னோர் கன்னித்தமிழ், செந்தமிழ், பைந்தமிழ், தீந்தமிழ், ஒண்டமிழ், தெய்வத்தமிழ், முத்தமிழ், மூவாத்தமிழ், பாலேய் தமிழ், செந்திறத்த தமிழ் என்னும் அழகிய பெயர்களாற் பாராட்டியிருப்பதற்குக் காரணம், இலக்கியக் கடலில் மூழ்கித் திளைத்த மூதறிஞர் பலர், இதன் செவ்வி குலையாதிருக்க இதற்கு இலக்கணம் வகுத்துப் போற்றி வந்ததேயாகும். அங்ஙனம் வகுக்கப்பட்ட இலக்கணங்களுள், பற்பல காரணங்களாற் பற்பல காலங்களில் இறந்தன போக, இருந்தனவற்றுள் தொன்றுமொழிப் புலவராகிய தொல்காப்பியர் வகுத்த தொல்காப்பியம் இன்றும் சிறந்து விளங்கக் காண்கிறோம். இது எழுத்து, சொல், பொருள் என்னும் முப்பிரிவுகளில் பொருட்பகுதியில் யாப்பும் அணியும் அடங்க, ஐவகை இலக்கணங்களையும் அழகுபெற விளக்குவதாம்.

மொழித்திறம் பேணலை வற்புறுத்துவார்போல ஔவையார், 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்,' என்றார். திருவள்ளுவரும் இதனை,

> 'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
> கண்ணென்ப வாழும் உயிர்க்கு,'

என வற்புறுத்தியுள்ளனர். ஒரு மொழியில் உள்ள இலக்கிய இலக்கணங்களை ஆய்ந்தறிந்தவர் அம்மொழியைக் கொண்டு எக்கலைத்துறையிலும் ஏற்றமுறலாம் என்பது அறிஞர் கருத்தாகும்.

'எண், எழுத்து' என்னும் சொற்களுள் 'எண்' என்பது 'கணக்கு' என்னும் பொருளது. 'கணக்கு' என்பது பண்டு இலக்கியத்தை உணர்த்தியதாதல் வேண்டும் என்பது, 'கீழ்க்கணக்கு, மேற்கணக்கு' என முன்னோர் இலக்கியங்களை வழங்கியிருப்பதால் புலனாகும். தமிழ் எழுத்துக்களுக்கு 'நெடுங்கணக்கு' என்

னும் பெயர் வழங்கி வருவதும், இலக்கிய மூலபாடங்களைக் கற்பித்து வந்த பண்டைத் தமிழாசிரியர்க்குக் 'கணக்காயர்' என்னும் பெயர் வழங்கி வந்தமையும் இக்கருத்தை வலியுறுத்தக் காணலாம். 'எழுத்து' என்பது, பண்டு இலக்கணத்தை உணர்த்திய சொல்லாம் என்பது, 'எழுத்தறியத்தீரும் இழிதகைமை' என்றும்,

'எழுத்தறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும்
எழுத்தறிவார்க் காணின் இலையாம்.'

என்றும் புலவர்கள் ஆண்டுள்ள சொல்லாட்சியாற் புலனும்.

எனவே, மொழித்திறம் பேணுவார்க்கு இலக்கண அறிவு இன்றியமையாதது. இலக்கண அறிவு புகட்டப் பின்னாளில் எழுந்த சின்னூல்களுள் நன்னூலே எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் பயில்வார்க்கு மேல்வரிச் சட்டமாயிருந்து பயனளித்து வருகின்றது. இலக்கணக் கொத்தின் ஆசிரியரான சாமிநாத தேசிகர்,

'முன்னோர் ஒழியப் பின்னோர் பலரினுள்
நன்னூ லார்தமக் கெந்நூ லாரும்
இணையோ இல்லெனும் துணிவே மன்னுக.'

என்று நன்னூலாசிரியரான பவணந்தி முனிவரைப் பாராட்டுகிறார். நன்னூலார் பகுபத இலக்கணத்தைப் 'பதவியல்' என்னும் பகுதியில் நன்கு விளக்கியுள்ளமை சொற்கூறுபாடுகளை நுணித்தாராய்வார்க்குப் பெரும்பயன் விளைப்பதாயுள்ளது. வடமொழியாக்கத்திற்கும் நன்னூல் நல்ல வழிகாட்டியாயமைந்துள்ளமை அறிஞர் கண்ட உண்மை.

மொழி மரபு காத்தலை வற்புறுத்தக் கருதிய பவணந்தி முனிவர்,

'எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே.'

என்று கூறியுள்ளது நாம் மறவாது போற்றுதற்குரியது. பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தும்போதும் அவற்றைத் தமிழொலி மரபிற்கு இயைய மாற்றியமைக்கும் முறையை நன்னூலார் வடமொழியாக்கத்திற்கான விதிகளை அமைத்திருப்பதால் அறியலாம்.

இம்முறையைப் பேணததுகாரணமாக, இந்நாளில் வெளி வரும் செய்யுளிலும் உரைநடையிலும் தமிழ்க்கு மொழி முத லாகா என விலக்கப்பட்ட எழுத்துகள் மொழிக்கு முதலாகின் றன; ஈறுகா என விலக்கப்பட்ட எழுத்துகள் ஈறுகின்றன. ஒன்றோடொன்று மயங்காத எழுத்துகளெல்லாம் மயங்குகின் றன. உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என வரையறுக்கப்பட்ட விதிகளுக்கு மாறாக மெய்கள் சொற்களில் மயங்கி வரக் காண்கிறோம். பொருட்புணர்ச்சிக்குக் கூறிய விதி கள், இடையுரி வடசொற்புணர்ச்சிகளுக்கும் மேற்கொள்ளப்படு கின்றன. சொற்களுட் பல தம் பழைய தோற்றத்தை இழந்து புதிய முறையிற் காட்சி அளிக்கின்றன. கற்றோர் இவற்றிற் கருத் தைச் செலுத்தாதிருப்பின், நாளடைவில், தமிழ்மொழி, பிற மொழியாளர் தூற்றும் நிலையினை அடைதலும் கூடும். இவற்றிற்கு எடுத்துக்காட்டாகச் சிலவற்றைக் குறிப்பிடலாம்:

தமிழில் ரகர வருக்கமும் லகர வருக்கமும் மொழிக்கு முத லாகாமையின், அவற்றை முதலாகக்கொண்டு வரும் வேற்று மொழிச் சொற்களைத் தமிழில் நுழைக்கும்பொழுது ரகர வருக் கத்திற்கு அ, இ, உ என்னும் எழுத்துகளுள் ஏற்ற ஒன்றும், லகர வருக்கத்திற்கு இகர உகரங்களுள் ஏற்ற ஒன்றும் மொழி முதலாகி முன்வரும் என்பது விதி இதற்கு மாறாக ரங்கன், ராமன் போன்ற சொற்களும், லங்கை, லாடம் போன்ற சொற் களும் நூல்களில் இடம் பெறுவதைக் காண்கிறோம்.

க, ச, த, ப, என்னும் மெய்கள் தம்மொடு தாம் மயங்குமே யன்றிப் பிறவற்றோடு மயங்கா இவ்விதிக்கு மாறாகச் சக்தி, பக்தி, மூக்தி, பிரச்னே, வித்வான், ஆப்தன் என அவை பயன்படுத்தப் படுவதைக் காண்கிறோம் சத்தி பத்தி, முத்தி, பிரச்சினே, வித்து வான், ஆத்தன் என இச்சொற்களை முன்னோர் முறைப்படி அமைத்திருப்பதை அவர்கள் நூல்களிற் காணலாம்.

வல்லின மெய்கள் ஆறும் தமிழிற்சொல்லுக்கு ஈறுகா என்பது விதி. குக், பீச், கோர்ட், நார்த், புருப் என எழுதுதல் இவ்விதிக்கு மாறுபட்டவை. இவற்றுக்கு உகரச்சாரியை சேர்த்து குக்கு, பீச்சு, கோர்ட்டு. நார்த்து, புருப்பு என எழுதுதலே நன்னூலார் காட்டிய வழி.

பொருட்புணர்ச்சியில் வன்றொடர்க்குற்றுகரத்துக்குப் பின் வலிமிகுதலைக்கொண்டு விகுதிப்புணர்ச்சியிலும் வலிமிகுத்தெழு துவது தருகும் என்பதை வாழ்த்துதல், போற்றுதல், கூப்புதல், விக்குதல், மெச்சுதல், காட்டுதல் என்னும் சொல்லாட்சி நன்கு

புலப்புடுத்தும். இதற்கு மாறாகக் 'கள்' விகுதி சேருங்கால் வன்றொடர்க்குற்றுகரத்தின் பின் வலி மிகுத்து, கொக்குக்கள், பேச்சுக்கள், காட்டுக்கள், வாத்துக்கள், செப்புக்கள், காற்றுக்கள் என்று எழுதப்படுவதைக் காண்கிறோம். உறுப்புகள், கொப்புகள், குறிப்புகள், எழுத்துகள் எனவே சில பழைய பதிப்புகளில் காணப்படுகின்றன. ஏடெழுதுவோரால் மயங்கி வலி மிகுத்துப் படிசெய்யப்பட்டமையே இப்பிழைப்புக்குக் காரணமாகலாம். கலைசைச் சிலேடை வெண்பாவில்,

> 'மாதரம்பொற் கொப்புகளும் மன்னீர் மதகுகளும்
> காதலையப் போடும் கலைசையே'

என விகுதிப்புணர்ச்சியில் வலிமிகாமையும் கருதுதற்குரியது. 'மலக்குகள் வணக்கம் செய்தார்' என்பது, சீறாப்புராணம், தலைமுறைப் படலம், 15. தமிழ்ப் பேரறிஞர் மறைமலையடிகளார் நூல்களிலும் வன்றொடர்க்குற்றுகரத்திற்குப்பின் விகுதிப்புணர்ச்சியில் வலிமிகாமை மேற்கொள்ளப்பட்டமை காணலாம்.[1]

பொருட்புணர்ச்சிக்குக் கூறிய விதியையே விகுதிப்புணர்ச்சிக்கும் மயங்கிக்கொண்டமையே 'நாள்கள்' என்பதை 'நாட்கள்' எனவும், 'தோள்கள்' என்பதை 'தோட்கள்' எனவும், 'பொருள்கள்' என்பதைப் 'பொருட்கள்' எனவும் மாற்றி எழுதக் காரணமாயிற்று எனலாம்.

'நடத்தலரி தாகுநெறி நாள்கள் சில' என்பது கம்பராமாயணம். (சுந்தரகாண்டம், உருக்காட்டு படலம், செய்யுள் 60).

> 'நாள்களோர் நாலைந்து திங்கள் அளவிலே...தோள்கள் இருந்தவா காணீரே'

என்பது பெரியாழ்வார் திருமொழி, 1:2:11

> 'கைதொழும் நாள்களும் ஆகுங் கொல்லோ?'

என்பது திருவாய்மொழி, 7:10:1

'அந்தக் காலம்' என்பதில் 'அந்த' என்பது சுட்டுத்திரிபாகலின், வலி மிக்கது. 'அந்த காலம்' என்பது. முடிவு காலம் எனப் பொருள்படுவதாகலின், வடமொழித் தொடரில் வலி மிகாதாயிற்று.

---

1. சிந்தனைக் கட்டுரைகள், 1925 ஜூலைப்பதிப்பு

'அந்த காலம் அடைவதன் முன்னம்'

என்பது, பெரியாழ்வார் திருமொழி, 4:5:3

நன்னூலிற் புணரியல்களுக்குப் புறனடையாய் அமைந்துள்ள 'இடையுரி வடசொலின்' எனத் தொடங்கும் நூற்பா விதிக்கும் விதிகொண்டு அமைதலே இவற்றிற்கு இலக்கணமாம்.

இனிப் பிழைபட்ட சொல்லாட்சிகள் சிலவற்றைக் காண்போம் :

'வேண்டா' எனும் சொல் பண்டுதொட்டு எதிர் மறைப் பொருளில் வழங்கி வருவது அறிஞர் அறியாததன்று.

'அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை.'

என்பது குறள். உலகநாத பண்டிதர் இயற்றிய உலக நீதியில் இச்சொல் 'வேண்டாம்' எனப் பிழைப்படப் பதிப்பிக்கப் பட்டதால், 'சிறுமையிற் கல்வி சிலையில் எழுத்து,' என்பதற்கு இலக்கியமாய், இளமையிலேயே சிறுவர் மனத்தில் இடங்கொண்டு, தமிழுலகில் நடையாடத் தொடங்கிவிட்டதைக் காண்கிறோம்.

'ஒருத்தி' என்னும் இலக்கிய இலக்கண ஆட்சிக்கு மாறாக, 'ஒருவள்' என்பது சிலர் எழுத்தில் இடங்கொள்கிறது.

'அன்றி, இன்றி' என்னும் குறிப்பு வினையெச்சங்களும் அகர இகரச் சுட்டுகளும், 'அன்று, அல்ல' என்னும் அஃறிணை ஒருமை பன்மைக் குறிப்பு முற்றுகளும், 'தான், தாம்' என்னும் இருதிணைப் பொதுப்பெயர்களும் தலை தடுமாறப் பயன்படுத்தப்படுத் தப்படுவதும் காணலாம்.

'காட்சி, மாட்சி, ஆட்சி' என்னும் தூய தமிழ்ச்சொற்கள் சிலர் எழுத்தில் 'காக்ஷி, மாக்ஷி, ஆக்ஷி' எனக் காட்சியளிக்கின்றன.

'மட்குதல்' என்னும் தொழிற்பெயர் 'மண்ணுதல்' என்னும் பொருளது. இது 'மக்குதல்' எனச் சிலர் எழுத்தில் உருத்திரிந்துள்ளது.

தமிழில் ரகர றகரங்கள் சொற்பொருள் உணர்ச்சிக்கு இன்றியமையாதனவாய் உள்ளன. 'அக்கரை' என்பது சேய்மையிலுள்ள கரையையும், 'அக்கறை' என்பது கவனம் அல்லது அவசியம் என்னும் பொருளையும் உணர்த்துகின்றன. சில்வரை,

சில்லறை; அரம், அறம்; திரம், திறம்; வரம், வறம்; கரி, கறி; நெரி, நெறி; முரி, முறி; எரி, எறி; கரித்தல், கறித்தல்; பரை, பறை; பரித்தல், பறித்தல்; நிரை, நிறை; கரை, கறை; உரை, உறை; திரை, திறை; வரை, வறை; பொருப்பு, பொறுப்பு; பொருத்தல், பொறுத்தல்; கவர்ச்சி, கவற்சி; கருப்பு, கறுப்பு; சுருசுருப்பு, சுறுசுறுப்பு; பாரை, பாறை என்பவை போலும் சொற்கள் உச்சரிப்பிலும் பொருளிலும் வேறு பட்டனவாய் உள்ளன. இத்தகைய சொற்கள் சிலர் எழுத்துகளில் ஒன்றுக்கொன்று தலை தடுமாறுதலைக் காணலாம்.

முந்நூறு, முன்னூறு என்னும் சொற்றொடர்களின் பொருள் வேறுபாடு புணர்ச்சியிலக்கணம் அறிந்தார்க்கன்றிப் பிறர்க்குப் புலனாதலில்லை.

'கிடைத்தல்' என்னும் சொல், இயைதல், நெருங்குதல், எதிர்த்தல்' என்னும் பொருள்களையே இலக்கியங்களில் உணர்த்தி நிற்கக் காண்கிறோம். 'கிடையாது' என்னும் எதிர்மறை ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்று, இப்பொழுது 'இல்லை' என்னும் பொருள்பட வழங்கப்படுவதும், 'அங்கு ஒருவரும் கிடையாது,' என உயர்திணை எழுவாய்க்கும் பயனிலை யாதலும் இலக்கணச் சிந்தனை இன்மையின் விளைவே எனக் கருதலாம்.

'கரத்தொடு காதலம் கிடைப்பப் பூட்டி,' கிடந்தானைக் கிடைத்திரு தடங்கை கூப்பினன்,' எனக் கம்ப நாடரும்,

'இருபடை களுமெதிர் கிடைக்கவே' எனச் சயங்கொண்டாரும் இச்சொல்லைப் பொருட்பொருத்தமுற ஆண்டுள்ளதைக் காணலாம்.

'முயற்சி' என்பது தொழிற்பெயர்ப்பகுபதம். இதனை 'முயல்+சி' எனப்பிரிக்கலாம். இது 'முயலுதல்' அல்லது 'முயற்சி செய்தல்' என்னும் பொருளைத்தருவது. இச்சொற்குப் பின்னும் 'தல்' விகுதி சார்த்தி, 'முயற்சித்தல்' என எழுதுவ தற்குக் காரணம், இலக்கண அறிவின்மையேயாம்.

சிலர், 'சில அரசர்', 'பல வீரர்' என 'சில, பல' என்னும் அஃறிணைப் பன்மைச் சொற்களை உயர்திணைப் பெயர்க்கு அடையாக்குவதும் பொருந்தாது. 'அரசர் சிலர், வீரர் பலர்' என அமைப்பதே மரபாகும்.

'சின்னம்' என்னும் சொல், 'சிறுமை' என்னும் பொருள் தரும்போது சொற்றொடர்களில் மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்ப நின்று வருமொழி முதல் எழுத்து வல்லினமாங்கால் அவ்

வலிமிக்குப் புணர்தல் மரபு. இதற்குச் 'சின்னக் காஞ்சிபுரம், சின்னச்சிலை, சின்னத்தெரு, சின்னப்பயன்' என்பன எடுத்துக் காட்டாயமையலாம். இத்தகைய சொற்றொடர்களைப் புணர்ச்சி விதிக்கு மாறாகப் பலர் வலி மிகாமலே எழுதக் காணலாம்.

சிதறிய பொருளைத் தெரிந்தெடுத்தலைப் 'பொறுக்குதல்' என்னும் சொல் குறிக்கும். இதன் அடியாகப் பிறக்கும் எதிர்மறை வினையெச்சம் 'பொறுக்காமல்' என அமையும். இவ்வினையெச்சத்தைப் 'பொறுத்தல்' என்னும் சொல்லடியாகப் பிறக்கும் 'பொறுமல்' என்னும் வினையெச்சப்பொருளிற்பயன்படுத்தலும் பொருந்தாது.

எனவே, இலக்கிய இலக்கணங்களைக் கருத்தூன்றிப் பயின்று, மொழி மரபு கெடாத வகையில் மொழித்திறம் பாதுகாத்தல் தமிழ் நலம் கருதும் நமது கடமையாகும்.

தொல்காப்பியம் உணர்த்தும் கடவுள் வாழ்த்து

(டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி, M.A.,M,O, L.,Ph D.)

"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தோடு கண்ணிய வருமே"—(புறத்., 33)

என்ற ஒரு நூற்பா, நம் தமிழர் பண்பாட்டின் உயிர் நாடியை உணர்த்தும் முறையில் தொல்காப்பியத்தில் அமைந்துள்ளது. இந்நூற்பாவிற்கு உண்மைப் பொருள் இஃது என்பது இது காறும் இதற்கு உரை கண்டவர்களால் உணர்த்தப்படவில்லை.

"இது, தேவரும் மக்களும் எனப்பகுத்த முறையானே, அப் பகுதி இரண்டும் கூறி, இன்னும் அத்தேவரைப் போல் ஒருவழிப் பிறக்கும் பிறப்பில்லாத தெய்வங்களும் பாடாண் திணைக்கு உரியர் என்கின்றது," என இந்நூற்பாவிற்குக் கருத்துக் கூறி, இதன் பொருள் கீழ்த்திசைக் கண்ணே நிலைபெற்றுத் தோன்றும் வெஞ்சுடர் மண்டிலம் (சூரியன்), ஒரு பற்றுக்கோடின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள், தண் கதிர் மண்டிலம் (சந்திரன்) என்று சொல்லப்பட்ட குற்றந் தீர்ந்த சிறப்பினையுடைய முற்கூறப்பட்ட மூன்று தெய்வமும், முற் கூறிய அமரரோடே கருதுமாற்றான் தோன்றும் என்றவாறு," என்று கூறுகிறார் நச்சினார்க்கினியர்.

ஐயனாரிதனார் தாம் இயற்றிய புறப் பொருள் வெண்பா மாலையில், "கொடி நிலையாவது அரிஅயன் அரன் என்னும் மூவர் கொடிபுள்ளும் ஒன்றோடு உவமித்துப் பலரும் பொருந்துதல் வரும் வேந்தனுடைய கொடியைப் புகழ்ந்தது," எனவும், "கந்தழியாவது வளைந்த திகிரியை உடையவன் (திருமால்) சோ என்னும் அரணத்தினை அழித்த கெடாத தன்மையினையுடைய வெற்றியைச் சிறப்பித்தது", எனவும், "வள்ளியாவது, ஆபரணத்தினுற் சிறந்த முலையினையுடையார் நெஞ்சு நெகிழ வேலினை யுடைய குமரனுக்கு வெறியென்னும் கூத்தை ஆடியது," எனவும் கூறுவர். (பு. வெ. மாலை, பாடாண்., 39, 40, 41).

இளம்பூரணருக்கும் ஐயனாரிதனார் கூறியதே கருத்தாதலை அவர் தொல்காப்பியத்தில் 'கொடி நிலை' எனத் தொடங்கும் நூற்பாவிற்கு எழுதியுள்ள உரையால் அறியலாம்.

வீரசோழிய உரைகாரர், 'கொடிநிலையாவது கொடியது தன்மை கூறுவ'தென்றும், 'கந்தழியாவது செருவிற்றெட்ப முடைமை' என்றும், 'வள்ளியாவது முருகவேளைக்குறித்த'தென் றும் கூறுவர். (பொருட்., 21 உரை).

பேராசிரியர் மு. இராகவ ஐயங்கார் அவர்கள் தாமியற்றிய பொருளதிகார ஆராய்ச்சி என்னும் நூலில், திருக்குறளில் உள்ள பாயிரக் கருத்தைத் துணையாகக் கொண்டு கூறும் பொருள் விளக்கம் வருமாறு: "இனி இச்சூத்திரத்திற்கு எம்கருத்திற் றேன்றிய பொருள் ஒன்றும் அறிஞர் ஆராய்ச்சிக்கு உரியதாகும். அஃதாவது தெய்வப் புலமைத் திருவள்ளுவனார், தம் பெருநூற் றொடக்கத்தே கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன்வலி யுறுத்தல் என்ற நான்கதிகாரங்களைப் பாயிரமாக நிறுத்திக் கூறினரன்றே! 'ஆயிரத்து முந்நூற்றுமுப்ப தருங்குறளும் பாயிரத்தினோடு பகர்ந்ததற்பின்' என்று சங்கப் புலவர் ஒருவர் இவற்றை வேறு பிரித்துச் சிறப்பித்தலும் காண்க. இங்ஙனம் இந்நான்கதிகாரங்களை மட்டும் பாயிரமாக வள்ளுவர் தனியே கொண்டது எக்காரணம் பற்றி என்றும் கேள்வி நெடுக நிகழ்ந்து வருவதுண்டு இதற்குத் தக்க விடை இதுகாறும் பெறப் பட்ட தில்லை. ஆயினும் தொல்காப்பியனூர் கூறிய 'கொடிநிலை கந்தழி'என்ற இச்சூத்திரம் அக்கேள்விக்கு விடைதர வல்லதென் பதேஎங்கொள்கை. அஃதாவது, இச்சூத்திரத்திற் கொடிநிலைகந்தழி வள்ளி என்ற மூன்றும் கடவுள் வாழ்த்தோடு வரும் என, உயர் பின் வழியே வரும் ஒருவினை ஒடுச் சொல்லைக் கடவுள் வாழ்த்துக் குக் கூறுதலால், அவ் வாழ்த்து முதற்கட் கூறும் சிறப்புடைய தென்பதும், மற்றவை அதன்பின்னர் வைத்து வாழ்த்தப்படுதற்கு உரிய என்பதும் அறியத்தக்கன. இவற்றுள் 'கொடிநிலை' என் பது மேகத்தை உணர்த்தும்; கீழ்த் திசைக்கண்ணே நிலைபெறு தலையுடையது, நீடனிலை யுடையது என்பன இதன் பொருளாம்.

[கொடி–கீழ்த்திசை; கொடி–கீழ்த் திசையாதல், 'குன் றி வர்ந்து கொடிக் கொண்ட கோடையால்' (150), 'கொடி மிசை மண்டிலம்' (141) எனவரும் கலித்தொகை யடிகளானும், 'கொடி முதலா வீங்கிவற்றைக் கொண்டெண்ணுங்கால' என்னும் சினேந்திர மாலைத் தொடரானும் (37) அறிக]

"நச்சினார்க்கினியரும் இவ்விரு பொருள்களை பற்றிச் சூரிய னுக்கு இப்பதத்தை இயக்குதல் காண்க. மேகவாகனனுகிய இந்திரனது திசை கிழக்காதலின் அத்திசையே மேகத்துக்குரிய தென்பதும், அங்கு நிற்றெழுந்த கொண்டல்களே, உலக தாபந் தீரப் பெய்வனவென்பதும் அறியத் தக்கன. குணக்கினின்றும்

எழுவது பற்றியே மேகம் கொண்டலெனப் பெயர் பெற்ற தென்க. (வடக்குக் குடக்குக்களினின்றும் எழும் காற்று வாடை கோடை எனவும், தெற்குக் குணக்குக்களினின்றும் எழும் காற்றுத் தென்றல் கொண்டல் எனவும் திரிந்து பெயர் பெறுதல் காண்க. "ஞாலம் வறந்தீரப் பெய்யக் குணக்கேர்பு—காலத்திற்றோன்றிய கொண்மூப் போல்" (கலித், ௭1) என்பதனல் கிழக்கிலெழும் கொண்டல்களே பெயலிற் சிறந்ததாதல் அறியப்படும். இவ்வாறன்றி மின்னற் கொடிக்கு நிலைக்களமாதல் பற்றி மேகம் 'கொடிநிலை' எனப்பட்டதெனினும் அமையும். இவ்வாற்றால், கொடிநிலை என்பது மேகத்தைக் குறிக்க வல்லதாதல் தெளியலாம். இரண்டாவது கந்தழி என்பது—கந்து—பற்று; அழி—அழிவு; அஃதாவது பற்றழிந்தாராகிய நீத்தாரது தன்மை என்ற படியாம். மூன்றாவதான வள்ளி என்பது அறத்தைக் குறிக்கும். என்னை ? அவ்வறம் சிறப்பாக வண்மை பற்றியே நிகழ்வதாதலின்; 'ஈதலறம்' என்றார் ஔவையாரும். நச்சினார்க்கினியர் தங்கொள்கைக்கியையச் சந்திரனுக்கு இப்பதத்தை இணக்குமிடத்து "வெண்கதிர் தேவர்க்கு அமிர்தம் வழங்கலான் வள்ளி எனப்படூஉம்," என்று கூறுதலினின்று, வண்மையடியாகவே வள்ளி என்ற சொல் வழங்கிய தென்பது அவர் கருத்தாதல் தெளியப்படும் படவே, வண்மையாகிய அறத்துக்குரிய கடவுள் வள்ளி எனப்பட்டதென்க. இங்ஙனம், மேகம், நீத்தார், அறக்கடவுள் என்ற மூன்றும் முதற் கடவுளை முதலாகக் கொண்டு வாழ்த்தப்படுதலும் இப் பாடாண் பகுதியாதல் கண்டுகொள்க. எனவே வள்ளுவனார் கூறிய பாயிரமும் இவ் விலக்கணம் பற்றியே அமைந்ததென்பது விளக்கமாம். ஆயின், மேற்கூறிய அறுமுறை வாழ்த்தில், வானையும், முனிவரையும் வாழ்த்துதல் கூறப்பட்டுள்ளதே யெனின், 'அமரர்கண் முடியும் அறுவகை யானும்' என்றே தொல்காப்பியனார் கூற, நச்சினார்க்கினியர் அவ்வறுவகை இன்னவின்ன என்று எழுதியதன்றி, மூலத்தால் அப்பகுதியொன்றும் அறியப்பட்டதில்லை; அதனாலும் 'அமரர்கள் முடியும்' எனப் பிறப்புவகைப்பட்ட தேவசாதியை ஆசிரியர் கருதுவதனாலும், அவ்வறுவகையின் கண்ணே செங்கதிர்க் கடவுள், தண்கதிர்க் கடவுள் முதலிய தேவர் அறுவர் அடங்கியவரென்றும், அறுமுறையுளடங்கியவராக நச்சினார்க்கினியர் கருதிய வானையும், முனிவரையும், 'கொடிநிலை கந்தழி' என்பதனால், ஆசிரியர் தனிப்படக் கூற்றுரென்றும் நாம் கருதுவது இழுக்காகாது.

("இளங்கோவடிகள், சிலப்பதிகார மங்கல வாழ்த்துக் காதையுள் இவ்வறுமுறையே கூறுதலும், சந்திரசூரியர் இவற்றுள் அடங்குதலும் காண்க. அவ்வடிகள்—திங்கள். செங்கதிர், மழை, புகார் (உலகு), உயர்ந்தோர் (முனிவர்), சோழன் (அரசு) என அறுவகை கொண்டு வாழ்த்துதல் அக்காதையால் உய்த்தறியற்பாலது. தம்பொதுக் கொள்கைக் கேற்ப, ஆவையும், பார்ப்பாரையும் விலக்கி, அவ்விடங்கட்கு மழையையும் முனிவரையும் கொண்டு இளங்கோவடிகள் அறுமுறை கூறினர் என்றே தோன்றுகின்றது. இங்ஙனம் தெளியக் கிடப்பவும். அடியார்க்கு நல்லார் இம்மங்கல வாழ்த்துக்களை அறுமுறைப்பாற் பட்டனவாகக் கொள்ளாது சென்றமைக்குக் காரணம் தெரிந்திலது.)

"மேற்கூறிப் போந்த எம் அபிப்பிராயங்கள் ஏற்புடையவாயின், தெய்வப் புலவர், தம் பொதுமறைத் தொடக்கத்தே பாயிரமாக நான்கதிகாரங் கூறிப் போந்தது தொல்காப்பிய முறை பற்றியதே என்பது வெள்ளிடைமலையாகும்." (தொல், பொருள்., ஆராய்ச்சி, பக்கம் 121-123.)

பாடாண் திணையை விளக்கும் பன்னிரண்டு நூற்பாக்களுள் இரண்டாம் நூற்பாவாகிய "அமரர்கள் முடியும் அறுவகையானும்" எனத் தொடங்கும் அதற்கு உண்மைப் பொருள் காண மாட்டாமையால் பல குழப்பங்கள் விளைந்துள்ளன. உரையாசிரியர்கள் காலத்திலேயே தமிழர் நெறி இன்னதென்று தெளியக் கூடாது போயினமையே இச்சூத்திரத்திற்கு உண்மைப் பொருள் காணமாட்டாமைக்குக் காரணம் எனலாம். ஏனையவர் நெறிக் கருத்துக்களெல்லாம் உரையாசிரியர்களை மயக்க, அவற்றை அவர்கள் மதித்து ஏற்றுக் கொண்டமையால் தொல்காப்பிய நூற்பாக்கள் பலவற்றிற்கு அவர்கள் தங்கள் போக்கில் உரையெழுதிச் செல்லலாயினர்.

தமிழர்நெறி அன்பு நெறியேயாகும். யாண்டும் நீக்கமற நிறைந்திலங்கும் கடவுள் ஒன்றே என்பது பண்டைத் தமிழர் துணிவாகும். யாண்டும் நீக்கமற நிறைந்திலங்கும் அருவான கடவுள், அன்பர்கள் நினைந்த வடிவில் உருவத் திருமேனி கொண்டெழுந்தருளிக் காட்சி நல்கிப் பலதத்துவக் கருத்துக்களும் விளங்கிக் கொள்ளும் மதிநலம் உண்டாக்கி அதனால் வீட்டின்பம் பெறுமாறு அருளவல்ல ஆற்றல் உடையதென்பதும் தமிழர் துணிவான கொள்கையாகும்.

அவரவர் விரும்பியவாறு, அன்பிற்குக் கட்டுப்பட்டுக் காட்சி தரும் பல்வேறு உருவத் திருமேனிகளே அமரர் என்ற சொல்லால் தொல்காப்பியரால் குறிக்கப்பட்டன என்று கொள்ளுவதே நேரிதாகும் என்பது பாடாண் திணை நூற்பாக்களையெல்லாம் ஒன்று சேர்த்து ஆராய்வார்க்குப் புலனாகும். (விரிவைத் 'தொல்காப்பிய நெறி' என்னும் எம் நூலில் காண்க.).

ஐயங்கார் கூறிய புதுப் பொருளும், 'அறுவகை' என்பதை அறுமுறை வாழ்த்தெனக்கொண்டும், நச்சினார்க்கினியர் 'கொடிநிலை' முதலியவற்றிற் குத் திரித்தும் வலித்தும் பொருள் கூறியிருத்தல் போலத் திருவள்ளுவர் பாயிரத்திற்கு ஒருவகையால் அமைதி காட்டவே 'கொடிநிலை' முதலியவற்றிற்குத்தாம் வேண்டியவாறு திரித்தும் வலித்தும் பொருள் கூறியிருத்தலன்றி, உண்மைப் பொருள் இன்னதெனத் துணிந்து கொள்ளுமாறு இல்லையென்பது மேற்காட்டிய பகுதியைப் படித்துப் பார்ப்பார்க்கு தானே விளங்குதி. ஆதலால்; கொடிநிலை முதலியவற்றின் உண்மைப் பொருள் இன்னதென்று ஆராய்தல் நம் கடமையாகும்.

"மாயோற் மேய காடுறை யுலகமும்," (*புறத்.,* 5) எனத் தொடங்கும் நூற்பாவிற்கு உரைகூறிய பின், "இவ்வாசிரியர் கருப்பொருளாகிய தெய்வத்தினை முதற் பொருளோடு கூட்டிக் கூறியது, தெய்வவழிபாட்டு மரபிதுவே, ஒழிந்தது மரபன்று என்றற்கு," என்று நச்சினார்க்கினியர் உணர்த்தியிருப்பது ஈண்டு நினைவு கூர்தற்குரியது. யாண்டும் நீக்கமற நிறைந்திலங்கும் கடவுள், அவ்வந்நிலத்தில், அவ்வந்நிலத்துறைவார் வழிபாட்டிற்கு இயைய, மாயோனாகவும், சேயோனாகவும், வேந்தனாகவும், வருணனாகவும் வெளிப்பட்டுக் காட்சி நல்கி அருள் செய்யும் என்னும் கருத்தினை நச்சினார்க்கினியர் தெள்ளத்தெளிய உடையவர் என்பது இதனால் விளங்கும். அங்ஙனமாயினும் 'கொடிநிலை கந்தழி வள்ளி' என்ற நூற்பாவின் கருத்தினை உள்ளவாறு விளக்குதற்கு அவர் ஆற்றல் பெறாமல் போனது வியப்பாகவே உள்ளது.

"நெய்தல் நிலத்தில் நுளையர்க்கு வலைவளம் தப்பின், அம் மகளிர் கிளையுடன் குழீஇச் சுறவுக் கோடு நட்டுப் பரவுக்கடன் கொடுத்தலின், ஆண்டு வருணன் வெளிப்படும் என்றார்," (தொல்., அகத்., 5) என்று நச்சினார்க்கினியர் கூறும் கூற்று ஈண்டு நினைவு கூர்தற்கு உரியது. கொடிநிலை என்பதில் வரும் கொடி, நெய்தல் நிலத்தவர் சுறவுக்கோடு நட்டு அதனைப்பற்றுக் கோடாகக் கொண்டு கடவுட் காட்சியைப் பெறுவது போன்று, கடவுட்காட்சி பெறுவதற்கு உரிய பற்றுக்கோடே யாகும்

என்பது திரு முருகாற்றுப்படையின் உண்மைப் பொருளை அறியவல்லவர்க்குத் தெளிவாகும். (அன்புநெறியே தமிழர்நெறி என்ற எம் நூலில் இதன் விரிவைக் காணலாம்).

"சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும், "(திரு முருகாற்-
219-220)

என்ற திருமுருகாற்றுப்படை அடிகள், கொடிநிலை என்பதன் உண்மைப் பொருளை அறிதற்கு உறுதுணையாகும்.

"சிறிய தினையரிசியை மலரொடு கலந்து பிரப்பரிசியாக வைத்து, மறியை அறுத்துக் கோழிக் கொடியொடு முருகன் அவ்விடத்தே நிற்கும்படி நிறுத்தி ஊர்தோறும் எடுத்த தலைமை பொருந்திய விழாப்பயிலும் அவ்விடங்களில் முருகன் உறைபவன்," என்பது இவ்வடிகளின் பொருள்.

இதில் வரும்' "வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ," என்ற பகுதி, கொடிநிலை என்பதன் உண்மைப் பொருளை உணர்தற்கு ஏற்ற உறுதுணையாதலைக் காணலாம். கொடியை நட்டு அக்கொடியொடு நிற்கும்படி செய்ய, அன்பர்களுடைய அன்பிற்குக் கட்டுப்பட்டு முருகன் அக்கொடியொடுநிற்றல் இயற்கையாம் என்பது இதனால் நமக்கு நன்குவிளக்கமாகின்றது. எனவே, கொடியொடு நிற்கச் செய்தல் அல்லது கொடியொடு நிற்றலே தொல்காப்பியர் குறித்த கொடிநிலையாம் என்று துணிந்து கூறலாம். கொடிநிலை எனினும், கந்துடைநிலை எனினும் ஒக்கும்.

கந்துடை நிலையாம் கொடிநிலையில் உருவக்காட்சி பெற்றவர், கந்தழி நிலையில், யாண்டும் நீக்கமற நிறைந்து அருவாய் நிற்கும் இறைக்காட்சியும் பெறுதல் வேண்டும். இறைக்காட்சி பெறுதலாவது, இறை வேறு தாம் வேறு எனாது, இறையொடு தாம் இரண்டறக் கலந்து நிற்றலேயாகும். இறையாகிய அது வேறு, தாம்வேறு எனக் காட்டி நிற்பவற்றின் இயல்புகளைத் தம் அறிவால் உள்ளவாறு உணர்ந்து, உணர்ந்த வண்ணம் அவற்றிலிருந்து நீங்கி இறையையே இடைவிடாமல் உள்ளம் பற்றி நிற்குமாறு செய்தலால், இறையோடு இரண்டறக் கலத்தலாகிய பேறு பெறலாம். தத்துவக் கூறுபாடுகளை உள்ளவாறு உணர்ந்து மெய்யுணர்வு பெற்று நிற்றலால் இந்த நிலையை எய்தலாம்.

மெய்யுணர்வு பெற்று அவ்வுணர்விலிருந்து மாருதிருப்ப வர்க்கே வீட்டின்பமாகிய பெறற்கரிய பேறு உண்டாவதாகும். மெய்யுணர்வோ, அறிவு நெறி பற்றி நின்று, தத்துவக் கூறுபாடுகள் அனைத்தையும் ஐயம் திரிபற உணர்ந்து அவற்றிலிருந்து நீங்கி நிற் பார்க்கே உண்டாவதாகும். அங்ஙனமாக, அன்பு நெறிபற்றி உருவக்காட்சி பெறுவார்க்கு வீட்டின்பம் எய்தலாவதோ என்று கேட்கலாம். அக்கேள்விக்கு விடையிறுப்பதாக அமைந்ததே 'கொடிநிலை கந்தழி வள்ளி' எனத் தொடங்கும் நூற்பாவாகும். இந்நூற்பாவே கடவுளை வாழ்த்தும் முறையை உணர்த்துவ தாகும். கடவுளை வாழ்த்துதலால், இனிப்பிறவாப் பேரின்பமா கிய வீட்டினை அடையலாம் என்னும் கருத்துடையதே இந்நூற் பாவாகும். கடவுளை வாழ்த்துதல் என்ருல், வணங்குதலும் நினைத்தலும் உடன் கொள்ளப்படும். கடவுளை நினைந்து, வாழ்த்தி வணங்குவார்க்கு வீட்டின்பம் பெறலாகிய பயன் கிடைக்கும் என்னும் கருத்துடையதே இந்நூற்பா.

கடவுளை வாழ்த்தி வணங்கி நினைத்தலில், அக்கடவுளுக்கு மூன்று நிலைகள் கொள்ளப்படும். அவை, கொடிநிலை, கந்தழி நிலை, வள்ளி நிலை என்பனவாகும். கொடி நிலை, எனினும் கந் துடைநிலை எனினும் ஒக்கும். இது முன்பும் கூறப்பட்டது. எனவே, கந்துடை நிலை, கந்தழி நிலை, வள்ளிநிலை என்ற மூன்று நிலைகள் கடவுள் வாழ்த்தில் கொள்ளப்படும்.

உருவத் திருமேனியாக அன்பர்கள் தேவுகின்ற (கொள்ளு கின்ற) வண்ணம், கந்தினை அல்லது கொடியினைப் பற்றுக்கோ டாகக்கொண்டு உருவத்திருமேனி காட்டிநிற்கும் கடவுள் நிலையே கந்துடை நிலை அல்லது கொடிநிலை ஆகும். இது மனமொழி மெய்களால் பற்றிக்கொள்ளுதற்கு உரிய கடவுள் நிலையாம்; தேடிக் கொள்ளுவதற்குரிய தெய்வ நிலையாம்.

கந்தழிந்து அருவமாக நிற்கும். நிலையே கந்தழிநிலையாம். இது மனமொழி மெய்களைக் கடந்து அவற்ருல் பற்றுதற்கு அரிய நிலையாம். தத்துவக் கூறுபாடுகள் அனைத்தும் உள்ளவாறு உணர்ந்து, அவற்றிலிருந்து நீங்கி நிற்றலாகும் மெய்யுணர்வு பெற்று அதனல் உணர்ந்தும் உணர்த்தலாகாது, உணர்வே வடிவாய் நின்று அநுபவித்தற்குரிய கடவுள்நிலை ஈதாகும்.

வீட்டின்பம் வழங்கும் வள்ளன்மையுடைய கடவுள் அவ் வீட்டின்பம் வழங்கும் அருள்நிலையே வள்ளி நிலையாம். வள்ளி என்பது தண்கதிர் மண்டிலம் எனக் கொள்ளும் நச்சினர்க்கினியர், "வெண்கதிர் தேவர்க்கு அமிர்தம் வழங்கலான் வள்ளி என்ப

தூஉம்'' என்று கூறுவதிலிருந்து, வீட்டின்பத்தை அன்பர்களுக்கு வழங்குதலால் கடவுளை வள்ளி எனலாம் என்பது பொருந்துதலால், அந்நிலையில் நிற்கும் கடவுள் நிலையை வள்ளிநிலை எனக் கூறுவது பொருத்தமுளதாதலை அறிக.

"கொடி நிலை, கந்தழி, வள்ளி,'' எனத் தொல்காப்பியர் கூறுவன முறையே கொடி நிலை, கந்தழிநிலை, வள்ளிநிலை எனக் கொள்ளத்தகுவன என்பதும், அவை மூன்றும் கடவுளை வாழ்த்தி வணங்கி நினைந்து வழிபாடாற்ற விரும்புவார் கோள்ளத்தகும் மூன்று வகையான கடவுள் நிலைகளாம் என்பதும், அவற்றுள் கொடிநிலை என்பது உருவமாகத் திருமேனிகொண்டெழுந்து காட்சி பெற விழையும் அன்பர்கட்குக் கொடியைப் பற்றுக்கோடாகக் கொண்டு அன்பர்கள் விழைந்தவாறே உருவத் திருமேனியுடன் வரும் கடவுள் நிலையாம் என்பதும், கந்தழிநிலை என்பது, யாண்டும் நீக்கமற நிறைந்து அருவமாக நின்று, தத்துவக் குறைபாடுகள் அனைத்தும் உணர்ந்து அறிவுநெறி பற்றி நிற்க விழைவார்க்கு மெய்யுணர்வு கொள்ளச் செய்யும் நிலையாம் என்பதும், வள்ளிநிலை என்பது அவர்கட்கு வீட்டின்பம் வழங்கும் அருள்நிலையான கடவுள் நிலையாம் என்பதும் இப்போது நன்கு விளங்கும்.

"கொடி நிலை, கந்தழி, வள்ளி என்ற மூன்றும்,'' எனக் கூறியமையாது, "வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்'' என்று எடுத்துக்கூறியிருப்பது கருதியுணர்தற்கு உரியது.'' "இவை மூன்றும் குற்றமில்லாத சிறப்புடையனவாம், என்பதும், "இவை இக்கூறிய முறையானே, கொடி நிலையை முதலாவதாகவும், கந்தழியை இரண்டாவதாகவும், வள்ளியை மூன்றாவதாகவும் கொள்ளவேண்டும் என்பதும் தொல்காப்பியர் கருத்தாதல் அங்ஙனம் கருதிப்பார்ப்பார்க்குத் தெளிவாகும். இவை மூன்றும் குற்றமில்லாத சிறப்புடையன என்பதால், இவற்றுள் ஒன்றற்கொன்று ஏறத்தாழ்வு கருதுதல் கூடாதென்பதும், 'மூன்றும்' என்ற முற்றும்மை கொடுத்துக் கூறுவதால், இவை மூன்றையும் ஒரு சேரக்கொள்ளவேண்டும் என்பதும், முதலன மூன்றும் என்பதால், கூறிய வரிசைப்படி, முதலில் கொடிநிலையையும், அடுத்துக் கந்தழிநிலையையும், அதனையடுத்து வள்ளிநிலையையும் வாழ்த்தி வணங்கி நினைந்து பயனுறல் வேண்டும் என்பதும் பெறப்படும்.

இந்நூற்பாவாகிய இலக்கணத்திற்கு இலக்கியமாய் அமைந்ததோ என்று எண்ணுவதற்கு இடமான திருமுருகாற்றுப் படையின் முடிந்த கருத்தைக்கொண்டு (அன்புநெறியே தமிழர் நெறி

என்பதைப் பார்க்க), "வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்" என்பதற்கு அரியதொரு பொருள் நயம் காணலாம். "கொடிநிலை, கந்தழி, வள்ளி" என்பன மூன்றில், முதலாவதாகக் கூறப்பட்டது கொடிநிலை. அது வடுநீங்கு சிறப்பினது. 'அதனை முதலாகக் கொண்ட மூன்றும்' என்று பொருள் கொண்டால், அன்பு நெறி பற்றிய கொடி நிலையை முன்னிட்டே அறிவு நெறி பற்றிய கந்தழி நிலையும் அதன்பயனாகிய வள்ளி நிலையும் அடைதற்பாலன; அஃதின்றி அவை அடைதற்பாலன அல்ல என்பது பெறப்படும். 'எழுத்தெல்லாம் அகரமுதல' என்பதற்கு, 'எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாக உடையன' என்பது போன்று, வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும், என்பதற்கு, 'மூன்றும் வடுநீங்கு சிறப்பின் கொடிநிலையை முதலாக உடையன' என்று இயைத்துக் கூறுவது பொருத்தமே யாதல் அறிக. கொடி நிலையை அடிப்படையாகக் கொண்டே, ஏனைய இரண்டும் அடைதற்பாலன என்பதும், கொடிநிலை வாழ்த்தால் முருகனுடைய உருவக் காட்சியை எய்தியக்கால், அவனருளால் மெய்யுணர்வும் வீட்டின்பமும் தாமே எய்துவன; அவற்றிற்குத் தனி முயற்சி தேவையில்லை என்பதும், அதனால் அறிவு நெறிச் செலவை முற்பட முயன்று மேற்கொள்ளல் வீணை முயற்சியாம் என்பதும், எனவே, அன்பு நெறிச் செலவு ஒன்றே போதும் என்பதும், அதனால் அன்பு நெறியே தொன்மைத் தமிழர் தனி நெறியாம் என்பதும் தொல்காப்பியரால் உணர்த்தப்பட்ட பொருளாம் என்று தெளியலாம்.

"மூன்றும் கடவுள் வாழ்த்தொடு கண்ணியவருமே," என்பதில் வரும் 'ஒடு' வை, உயர்பின் வழிவரும் ஒருவினை ஒடுச் சொல் எனக்கொண்டு, "கடவுள் வாழ்த்துவேறு; அஃது உயர்ந்தது; ஆதலால் முதற்கண்வைத்து உயர்த்துக்கூறும் சிறப்புடையது; கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற மூன்றும் வேறு; ஆதலால் அவை அதன்பின்னர் வைத்து வாழ்த்தப்படுவதற்கு உரியன," என்று பலரும் கூறியிருக்க, "மூன்றும் கடவுளை வாழ்த்தி வணங்கி நினைந்து வழிபாடாற்ற விரும்புவார் கொள்ளத் தகும் மூன்று வகையான கடவுள் நிலைகளாம்," என்பது எவ்வாறு பொருந்தும் என்ற ஐயம் எழுப்பலாம்.

பலரும் என்ற அவரெல்லாம், 'அறுவகை' என்பதற்குத் தாம் கண்ட பொருளுக்கேற்ப, இந்நூற்பாவிற்குப் பொருள் காண முற்பட்டுத் தாம் கூறவந்த பொருளுக்கு ஏற்ப இலக்கணமும் கூறிச் சென்றனர் என்க.

கடவுள் வாழ்த்துக் கூற முற்படுவோர்க்கு, அதனோடு மூன்றும் கண்ணியவரும் என்று யாம் கொண்ட பொருளில், கடவுள் வாழ்த்தை முதற்பொருளாகவும், மூன்றையும் அதன் சினைகள் அல்லது உறுப்புக்களாகவும் கொள்ளுதல்வேண்டும். பொன்னனொடு (அவன்) கை கால் தலை மூன்றும் வருமென்றால் பொன்னனை வேறாகவும், அவன் கை கால் முதலிய உறுப்புக்களை வேறாகவும் கொள்ள எவரும் இயையார். "முதலிவை சினை யிவை என வேறு உள இல." மேலும், 'கண்ணிய' வரும் என்று தொல்காப்பியர் கூறுதலால், கடவுள் வாழ்த்தை இடமாகக்கொண்டு அவை மூன்றும் வரும் என்பதே தேற்றமாம்.

எனவே, "கடவுள் வாழ்த்தாக ஒன்றைக் கூற விரும்புவார், அதன் உறுப்புக்களாகிய கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற மூன்றையும் உணர்த்தவேண்டும்; மூன்றையும் ஈண்டுக் கூறிய அளவே கூறவேண்டும்; அவற்றுள் முதலதாகிய கொடிநிலை வடு நீங்கு சிறப்பினது; அதனால் ஏனைய இரண்டும் பெறற் பாலவை," என்றெல்லாம் பொருள் கொள்ளுமாறு தொல்காப்பியர் அமைத்துள்ள ஒரு நூற்பாவானது தொல்காப்பியத்தின் உயிர்நாடியாய், உலகவர் அனைவர்க்கும் கடவுள் வாழ்த்தின் உண்மையை உணர்த்தும் வழிகாட்டியாய் இலங்குவது எனலாம்.

"கடவுள் வாழ்த்தொடு கண்ணியவருமே," என்பதற்குக் "கடவுளை வாழ்த்துதல் காரணமாக (மூன்றும்) அவை கருது மாற்றால் வரும்" என்றும் பொருள் கொள்ளலாம். அங்ஙனம் கொள்ளும்போதும் கருத்து ஒன்றே.

> **" சினனே பேதைமை நிம்பிரி நல்குரவு**
> **அனைநால் வகையும் சிறப்பொடு வருமே."**
>
> (தொல்., பொருள்., 51)

என்பதற்குப் பொருள்கூறும் நச்சினார்க்கினியர், "சினனும் (நீடித்த கோபமும்), பேதைமையும் (ஏழைமையும்), நிம்பிரியும் (பொறாமை தோன்றும் குறிப்பும்), நல்குரவும் (செல்வம் இன்மையும்) என்ற அத்தன்மையனவாகிய நாற்கூறும், ஒரு பொருளைச் **சிறப்பித்துக் கூறுதல் காரணத்தால்** வரும்," என்று உரைத்திருப்பது யாம் மேற்கூறிய பொருளுக்கு அரணாக நிற்றல் காண்க. ஈண்டுச் 'சிறப்பொடு' என்பதற்குச் **சிறப்பித்துக் கூறுதல் காரணத்தால்** என்று பொருள் கொள்வது போலக் 'கடவுள் வாழ்த்தொடு' என்பதற்குக் **கடவுளை வாழ்த்துதல் காரணத்தால்** என்று பொருள் கொள்வதே நேரிதாகும்.

இந்நூற்பாவாகிய இலக்கணத்திற்கு இலக்கியமாய் இலங்குவது திருமுருகாற்றுப்படை என்றேம். அஃது எப்படி என்பதை உணர்ந்தால், இந்நூற்பாவிற்கு யாம் கொண்ட பொருளின் பொருத்தம் தெளிவாகும்.

அறிவுநெறிச் செலவை மேற்கொள்ளத் துடிதுடித்து நிற்பவனைப் பார்த்து உணர்வு கொளுத்த நிற்பவன், "அறிஞனே, வீடுபேற்றிற்கு அன்புநெறியே சிறந்தது. அதனை முன்னிட்டுக் கொண்டு அறிவுநெறிச் செலவை மேற்கொள்வாயானால், நீ முன்னிய வீடுபேருகிய வினையை இன்றே பெறலாம். அன்புநெறிச் செலவால் முருகனைத் திருப்பரங்குன்றம் முதலான இடங்களில் காணலாம். ஆண்டெல்லாம் செல்லவும் தேவையில்லை. இருந்த இடத்தில் இருந்தபடியே அவனைக் காணலாம். அதற்கு அன்பொன்றே தேவை. அன்பு வடிவினனை முருகனை, அன்பே, அன்பர்களிடத்தில் ஆற்றுப்படுத்தும் நீ அன்புடையவன் ஆயினுல், உன் அன்பே, அன்புவடிவினனுகிய முருகனை உன்னிடத்தில் ஆற்றுப்படுத்தும். கொடி கந்தாக அவனுடைய காட்சி பெறும் முறையை அறிந்தாய். உன் உள்ளமே கந்தாக அவன் உருவை அன்புடன் நினைந்து வாழ்த்தி வணங்குவாயாயின்,

> "தெய்வம் சான்ற திறல்விளங்கு உருவின்
> வான்தோய் நிவப்பின் தான்வந் தெய்தி
> அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
> மணம்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி",

(திருமுருகாற்., 287—99)

அவனே,

> "விழுமிய பெறலரும் பரிசில் நல்கும்" (ஷை 294—95)
> "மதி பலவுடன்" (ஷை 295)

என்று கூறுமிடத்து, 'இளநலம் காட்டி', என்பதனுல் கொடிநிலைவாழ்த்தின் இயல்பையும், 'மதி பலவுடன்' என்பதனுல் கந்தழி வாழ்த்தின் இயல்பையும், 'பரிசில் நல்கும்' என்பதனுல் வள்ளி வாழ்த்தின் இயல்பையும் விளங்க உணர்த்தியிருத்தலை நாம் உணரலாம்.

முருகனே, "மதிபலவுடன் பெறவரும் பரிசில் நல்கும்", என்பதனுல், கந்தழிநிலைப்பேறும், வள்ளிநிலைப்பேறும், கொடிநிலைப்பேற்ருல் தாமே வந்து எய்தவன என்பது பெறப்படுகின்றது.

எனவே, "கொடிநிலை கந்தழி வள்ளி", என்பவற்றுள் கொடிநிலை வடுநீங்கு சிறப்பினது என்பது தெளிவாம்.

இவ்வாற்றால், அன்பு நெறியால் முருகன் வருகையை விழை வார்க்கு, அவன் எழுந்தருளிக் காட்சி நல்கி, மெய்யுணர்வை உண்டாக்கி, வீடும் அருளுவான் என்ற திருமுருகாற்றுப்படை யின் திரண்ட கருத்தே "கொடிநிலை கந்தழி வள்ளி" என்று தொடங்கும் நூற்பாவின் திரண்ட கருத்தாயும் அமைகின்றது.

கடவுள் வாழ்த்தின் இயல்பையும் வகையையும் பயனையும் இங்ஙனம் தொல்காப்பியர் கூறியிருக்கவும், உண்மை உணர மாட்டாதவரெல்லோரும் தமிழர் பண்பாட்டில் கடவுளை வாழ்த்துதல் என்பதே அயலவரிடமிருந்து கடன் வாங்கிய என் றும், சங்கநூற்றொகைகளில் முதற்கண்வரும் கடவுள் வாழ்த்துக் கள் பிற்காலத்துப் பாடிச் சேர்க்கப்பெற்றவை என்றும் வாய் கூசாது கூறி வருவது திகைப்பையே உண்டாக்குகின்றது என லாம். தொல்காப்பியத்தின் உயிர்நாடியாய் நிற்கும் இவ்வொரு நூற்பா, பல்வேறு சமயத்தவரும் கூறும் உண்மைகளின் பிழிவாய், பிறப்பெடுத்தவர்கள் தங்கள் பிறவிப் பயனை எளிதில் அடைய வழி காட்டுவதாய் உள்ளதால், இதன் பொருளைப் பொன்னேபோற் போற்றினல் எவரும் பிறப்பற்றுப் பேரின்பம் எய்தலாம் என்பது திண்ணமாகும்.

நன்னூலின் நற்கூறுகள்

(பேராசிரியர் ஞா. தேவநேயன்)

முற்றும் நன்மையே பயப்பதும் முற்றும் தீமையே விளைப்பதுமான பொருள் ஒன்றும் இவ்வுலகத்தில் இல்லை கடுகிக் கொல்ல வல்ல கடுநஞ்சுள்ள நல்ல பாம்பினின்றும், கைகால் பிசகலைத் தீர்க்கும் நன்மருந்து நெய் இறக்கப்படுகின்றது. ஒரு நன்மையுந்தராததென்றும் ஒன்றிற்கும் உதவாததென்றும் இது வரை கருதப்பட்டுவரும் பொருளின் நற்கூறும், எதிர்காலத்தில் அறியப்படும்.

9–6–ஆம் ஆண்டு. 'தென்றல்' இதழில், "நன்னூல் நன்னுலா ?" என்னும் தலைப்பில் யான் வரைந்த கட்டுரையை, ஒரு நண்பர் பிறழவுணர்ந்ததால், அவர் மறுப்பிற்கு ஓர் இறுப்பு யான் விடுக்க வேண்டியதாயிற்று. நன்னூலின் தீக்கூறுகளைப் போன்றே அதன் நற்கூறுகளையும் நான் உணர்ந்திருப்பதோடு, "முன்னூ லொழியப் பின்னூல் பலவினுள் நன்னூலார்தமக் கெந்நூலாருமிணையோ?" என்னும் சுவாமிநாததேசிகர் துணிவொடு உடம்பாடுமுடையேன். இதுபோதுள்ள இயற்றமிழ் நூல்கட்கெல்லாம் அடிமணையாய் விளங்கும் தொல்காப்பிய நிறை நூலுள்ளும் குறைகாணும்யான், நன்னூலிலுள்ள ஆரியக் கருத்துக்களையோ, மொழி நான்மலைவுகளையோ எடுத்துக்கூறுவது, நன்னூலன்பர்க்கும் என்னொடு முரணுவார்க்கும் என்னேனும் வருத்தம் விளைக்கவேண்டியதில்லை. கீழ்க்காணும் குறிப்புக்களைக் காண்பார்க்கு என் நடுநிலை நன்கு விளங்கும்.

நன்னூலின் நற் கூறுகளாவன :—

1. சொற் சுருக்கம்

"னலமுன் றனவும் ணளமுன் டணவும்
ஆகுந் தநக்கள் ஆயுங் காலே." (237)

என்னும் ஒருநூற்பாவே நன்னூலின் சொற் சுருக்கத்தை எடுத்துக்காட்டப் போதியதாம்.

2. இயலுரைப்பு

எழுத்தின் வகையைக் கூறப்புகுந்த விடத்து, "மொழி முதற் காரண மாமணுத் திரளொலி-எழுத்து" (58)

என அதன் இயலையும் உடன்கூறியது பாராட்டத்தக்கதே.

3. இயல் நிறைவு

சொல்லிலக்கணத் தெளிவிற்கு, முதனிலை, ஈறு, இடைநிலை, சாரியை, புணர்ச்சி, திரிபு ஆகிய அறுவகைச் சொல்லுறுப்புக் களையும் பிரித்துக் காட்டுவது இன்றியமையாததாம். நன்னூலிற் கிளவியியல் எனற்பாலதைப் பதவியல் என்றும், முதனிலை யீறு புணர்ச்சி திரிபு என்பனவற்றை முறையே பகுதி விகுதி சந்தி விகாரமென்றும், வேண்டாது வடசொல்லாற் குறித்திருப்பினும்; அறுவகைச் சொல்லுறுப்புக்களும் தொல்காப்பியத்துள்ளும் எழுத்ததிகாரத்திலும் சொல்லதிகாரத்திலும் ஆங்காங்கு வெவ் வேறு கூறப்பட்டிருப்பினும், அவற்றையெல்லாம் ஓரியலாகத் தொகுத்துச் சொல்லமைப்பும் சொற்றிரிவும் மாணவர்க்கு ஒருங்கே விளங்குமாறு வகுத்துக்கூறியது நன்னூற்குத் தனிச் சிறப்பைத் தரும் கூறும். இதனுல்,

“ எண்பெயர் முறைபிறப் புருவ மாத்திரை
முதலீ றிடைநிலை போலி யென்றா
பதம்புணர் பெனப்பன் னிருபாற் றதுவே. ” (57)

என எழுத்திலக்கணங்களை யெல்லாம் முழுநிறைவாகத் தொகுத் தும் வகுத்தும் குறிக்க இயல்வதாயிற்று.

இனி,

“ ணன முன்னும் வஃகான் மிசையுமக் குறுகும். ” (96)

என்னும் மகரக் குறுக்க நூற்பாவும்,

“ இலக்கண முடைய திலக்கணப் போலி
மரூஉவென் றாகு மூவகை யியல்பும்
இடக்க ரடக்கன் மங்கலங் குழூஉக்குறி
எனுமுத் தகுதியோ டாறும் வழக்கியல். ” (267)

என்னும் வழக்கியல் நூற்பாவும்,

“ செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டில் ” (340)

என்னும் பெயரெச்ச வாய்ப்பாட்டு நூற்பாவும்,

“ யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்
தாப்பிசை யளைமறி பாப்புக் கொண்டுகூட்
டடிமறி மாற்றெனப் பொருள்கோ ளெட்டே. ” (411)

என்னும் பொருள்கோள் நூற்பாவும், இவைபோன்று ஏனைய சிலவும், தொல்காப்பியத்தினும் நிறைவுபடக் கூறுவன என்னும் உண்மை அறிஞர் அறிந்ததே.

4. இயல் தெளிவு

இலக்கண முறையில் பெயரும் வினையும் இடையும் போலத் தனிவகையாகாது, பெயரும் வினையுமே வடிவுதிரிந்து செய்யுளிற் சிறப்புப்பொருளை மரபாகவுணர்த்துவது உரிச்சொல் என்பது

"உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
இசையினுங் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடு மாறி
ஒருசொற் பலபொருட் குரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட் குரிமை தோன்றினும்
பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள் வேறு கிளத்தல்." (782)

என்னும் தொல்காப்பிய நூற்பாவாற் குறிப்பாய்ப் பெறப்படினும், அதை வெளிப்படையாய் அறிவித்தவை,

"பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி
ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன வுரிச்சொல்." (442)

"......................பிங்கல முதலா
நல்லோ ருரிச்சொலின் நயந்தனர் கொளலே." (460)

என்னும் நன்னூல் நூற்பாக்களே.

5. தொகுத்துக் கூறல்

ஓரினம் பற்றிய பல்வேறு பொருள்களைத் தனித்தனி வெவ்வேறிடத்திற் கூறுவதினும், அவற்றையெல்லாம் ஒருங்கேயறியுமாறு ஒரே நூற்பாவிற் றொகுத்துக் கூறுவது சாலச் சிறந்ததாம். இதற்கு,

"மூன்றுயி ரளபிரண் டாநெடி லொன்றே
குறிலோ டையௌக் குறுக்க மொற்றள
பரையொற் றிஉக் குறுக்க மாய்தம்
கால்குறள் மஃகா னய்த மாத்திரை." (99

என்னும் நூற்பா சிறந்த எடுத்துக்காட்டாம். இனி, ஒரே பொருட்குரிய பல்வேறியல்களை ஒருங்கே கூறுவதும் சாலச் சிறந்ததே.

எடுத்துக் காட்டு:

"மெய்யுயிர் முதலீ ருமிரு பதங்களும்
தன்னொடும் பிறிதொடு மல்வழி வேற்றுமைப்
பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே." (151)

"ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி யென்று
இருதிணை யைம்பாற் பொருளையுந் தன்னையும்
மூவகை யிடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே." (259)

6. ஓசையினிமை

"கண்கால் கடையிடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலமிட மேல்கீழ் புடைமுதல்
பின்பா டளைதே முறைவழி யுழியுளி
உள்ளகம் புறமில் லிடப்பொரு ளுருபே." (302)

என்னும் நன்னூல் நூற்பாவை,

"கண்கால் புறமகம் உள்ளுழை கீழ்மேல்
பின்சார் அயல்புடைய தேவகை எனாஅ
முன்னிடை கடை தலை வலமிடம் எனாஅ
அன்ன பிறவும் அதன்பால வென்மனார்." (566)

என்னும் தொல்காப்பிய நூற்பாவொடு ஒப்புநோக்கின், எது ஓசையினிமையில் விஞ்சியது என்பது தெரியவரும்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே," (462)

என்னும் புறனடை நூற்பாவும் நன்னூலின் ஒழுகிசையினிமையைக் காட்டும்.

இனி, நன்னூல் பொருளிலக்கணங் கூறாத குறை நூலன்றோ வெனின், "இருந்தமிழ்க் கடலுள் – அரும்பொருளைந்தையும் யாவரு முணரத்—தொகைவகை விரியிற் றருகென"ச் சீயகங்கன் கேட்டதினாலும், அதற்கிணங்கிய பவணந்தியார் எழுத்ததிகாரத் தொடக்கத்தில் படைப்புத் தெய்வ வணக்கத்தையும் சொல்லதிகாரத் தொடக்கத்தில் காப்புத்தெய்வ வணக்கத்தையும் கூறியதினின்று, அழிப்புத் தெய்வ வணக்கத்தை முடிவதிகாரமாகிய பொருளிலக்கணத்திற்கு ஒதுக்கிவைத்தா ரென்றெண்ணக் கிடத்தலாலும், இடையூற்றின் மிகுதியாலோ இயற்கைத் தடையாலோ நன்னூல் முற்றுப்பெறுது போயிற்றென்றே கூறிவிடுக்க.

இலக்கண வளர்ச்சி

பைந்தமிழ்ப் பாவலர்.
அ. கி. பரந்தாமனுர், M. A.,
(தியாகராசர் கல்லூரி, மதுரை.)

இலக்கணம் கற்றலின் இன்றியமையாமை:

அமிழ்தினும் இனிய தமிழ்மொழி, ஐரோப்பியத் தமிழறிஞர் கூவலபெல் கூறுகிறவாறு தொன்மொழிகளுள் ஒன்றாக விளங்குவதுமட்டு மன்றிப் பேச்சு வழக்கில் பெரும்பாலும் சிதைந்து தாழ்ந்து போகாமல் இன்றும் கன்னித் தமிழாக, தமிழகத்திலுள்ள யாவரும் புரிந்துகொள்ளும்படியான செந்தமிழ் மொழியாக (Standard Tamil), மூன்று கோடி மக்கள் நாவில் உலவும் மொழியாக இருந்துவருகிறது. இந்த மொழி மிகுதியாகச் சிதைந்து போகாமல் வளர வேண்டுமென்றால், தமிழிலக்கணம் நடைமுறையளவாவது, தமிழ் மக்களிடத்தில் வற்புறுத்தப்படல் வேண்டும். சேர நாட்டில் தமிழிலக்கணம் வற்புறுத்தப்படாமல் இருந்ததால், பிற்காலத்தில் தமிழ் கொச்சை மொழியாகி, வடமொழிச் சொற்களை ஏற்று, வேறொரு மொழி எனக் கருதுமாறு கி. பி. 10-ஆம் நூற்றுண்டில் மலையாள மொழியாகக் கிளைத்து விட்டது. பன்னெடுங்காலமாகத் தமிழறிஞர்கள் தமிழிலக்கணத்தை வற்புறுத்தி வருவதால் மற்றப் பகுதிகளில் எழுத்து மொழி பெரும்பாலும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இதனாலன்றே கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பரஞ்சோதி முனிவர் தமது திருவிளையாடற் புராணத்தில்,

> " கண்ணு தற்பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து
> பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
> மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
> எண்ணி டப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ ?"

என்று தமிழ் மொழி இலக்கணவரம்புக்குட்பட்டு நடக்கும் மொழி என்றூர் ?

இலக்கணம் மொழிக்கு முதுகெலும்பு போன்றது. முதுகெலும்பு இல்லாதவன் எவ்வாறு இயங்குவது அரிதோ, அவ்வாறு ஒரு மொழியும் இலக்கணம் இன்றி நடைபெறுவது இயலாது. இலக்கணமே வேண்டுவதில்லை என்று சொல்பவர்களும் ஒரு சிறிது இலக்கண விதிக்குட்பட்டு எழுதுவதைக் காண்கிறோம். இலக்கணம் பிழையற எழுதுவதற்கும் பேசுவதற்கும் பயன்படு

வதன்றி பொருள் தெளிவுக்கும் துணைபுரிகின்றது. இதனாலன்றோ உலகப் பொதுமறையை அளித்த வள்ளுவரும்,

> "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
> கண்ணென்ப வாழும் உயிர்க்கு,"

என்று கூறி இலக்கணத்தை வற்புறுத்தினர்? வள்ளுவர் வழி நின்று பிற்கால ஔவையாரும் இரத்தினச் சுருக்கமாக, "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்," என்றார். உலகக் காட்சியைக் கண்டு இன்புற்று வாழ்வதற்குக் கண் எப்படி இன்றியமையாததோ அப்படிப் பொருளறிந்து தெளிவுற்று வாழ்க்கையை நடத்துவதற்கு இலக்கணம் கட்டாயம் மக்களுக்கு—அறிவுடைய மக்களுக்கு—தேவைப்படுகிறது. வள்ளுவரோ வாழும் மக்களுக்கே இலக்கணம் வேண்டும் என்று வற்புறுத்தியிருப்பது காண்க.

பழம்பாட்டு ஒன்று வீட்டு நெறியை அடைவதற்கும் இலக்கணம் வேண்டும் என்னும் பொருள்தருமாறு,

> "எழுத்தறியத் தீரும் இழிதகைமை; தீர்ந்தான்
> மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்; மொழித்
> திறத்தின்
> முட்டறுத்த நல்லோன் முதல்நூற் பொருளுணர்ந்து
> கட்டறுத்து வீடுபெறும்,"

எனக் கூறுகிறது. வீட்டுநெறிக்கும் இலக்கணம் துணைபுரிகிறது என்பது மேற்குறித்த பாடலின் கருத்தாகும்.

தமிழிலக்கணச் சிறப்பு

தமிழிலக்கணத்தைக்கண்டு அஞ்சி நடுங்கி ஓடவேண்டுவதில்லை. கற்பிக்கும் திறமுள்ளார் கற்பித்தால் தமிழிலக்கணம் மிக இனிதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. குறிலை ஒரு மாத்திரையும் நெடிலை இரண்டு மாத்திரையும் மெய்யெழுத்தை அரை மாத்திரையும் குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் இவற்றைத்தனித்தனி அரைமாத்திரையும் ஒலிக்குமாறு தொல்காப்பியம் குறிப்பிட்டிருக்கிறதென்றால், எத்தகைய அறிவியல் முறையில் தமிழிலக்கணம் அமைந்திருக்கிறதென்று சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். குற்றியலுகரத்தின்மேல் புள்ளி வைப்பது பண்டைக்கால மரபு. காரணம் என்ன? எட்டு என்று, டுகரத்தின்மேல்புள்ளி வைத்தால் அதனை ஐயமின்றி 8 என்னும் எண் என்று கொள்ளலாம். அதன்மேல் புள்ளிவைக்கா

திருந்தால் எள்+து (எள்ளைத் தின்) என்றும் பிரித்தல் கூடும். இப்படி நுட்பமாகத் தமிழறிஞர்கள் இலக்கணத்தை வகுத்திருத்தல் காண்க. நாதன் பாடினன் என்பதற்கும் நாதற்பாடினன் என்பதற்கும் வேறுபாடிருப்பதைக் காண்க. நேராக இருக்கும் ஓசையை நேரசை என்றும் வளைந்திருக்கும் ஓசையை நிரையசை என்றும் அறிவியல் முறையில் யாப்பிலக்கணத்தில் அசைக்குப் பெயரிட்டிருப்பதையும் கண்ணிமைத்தலும் கைநொடித்தலும் மாத்திரைக்கு அளவு என்றுதொல்காப்பியம் கூறுவதையும் எண்ணிப் பாருங்கள். யாப்பருங்கலக்காரிகையி லுள்ள ஒரு நூற்பா,

'உன்னல் காலே உறுத்தல் அரையே
முறுக்கல் முக்கால் விடுத்தல் ஒன்றே'

எனக் கைந்நொடித்தலை வகுத்துக்காட்டும் நுட்பத்தைப் பாருங்கள்.

இன்ன இன்ன எழுத்துக்கள் இன்ன இன்ன இடத்தில் பிறக்கிறது என்று இற்றைக்கு ஏறக்குறைய 2,300 ஆண்டுகட்கு முன்னரே தொல்காப்பியர் தமது நூலில் குறிப்பிட்டிருக்கிறார் என்றால், தமிழிலக்கணத்தின் சிறப்பினை என்னென்று கூறுவது?

தொல்காப்பியம் மட்டும் அப்படி இல்லை. கி.பி. 13–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய நன்னூலும் மிகச் சிறப்புடையதாகவே இருந்து வருகிறது. தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களை நன்கு கற்றவராகிய சாமிநாத தேசிகர் தமது இலக்கணக்கொத்தில்,

"முன்னூல் ஒழியப் பின்னூல் பலவினுள்
நன்னூலார் தமக்கு எந்நூலாரும்
இணையோ என்னும் துணிவே மன்னுக"

என்று நன்னூலின் பெருமையை அறுதியிட்டு உறுதியாகக் கூறியுள்ளார். நன்னூலைப் படித்து வியப்படைந்த பிரதர்ட்டன் என்ற ஆங்கில அறிஞர், "நன்னூலைப்போல மிகச் சிறந்த தர்க்க முறையில் அமைந்த வேறொரு மொழி இலக்கணம் உலகிலேயே இல்லை," என்று அதன் தருக்கமுறைச் சிறப்பினைப் பாராட்டியிருக்கிறார்.

பொதுவாகத் தமிழிலக்கணம் அறிவைக் கூர்மையாக்கும் தன்மை மிக்கது; அறிவியல் முறையில் அமைந்தது. பேராசிரியர் சூரிய நாராயண சாஸ்திரியார் எழுதிய தமிழ்மொழியின்

வரலாறு என்னும் நூலுக்கு அளித்த முகவுரையில் F.W. கெல்லட் என்ற ஆங்கில அறிஞர், "தமிழிலக்கணம் கற்பார்க்கு அதை மேலும் மேலும் கற்கும்படி பற்றுண்டாக்கவல்லது; அதன் இலக்கியம் எந்த நாட்டினரும் பெருமையுறத்தக்கது" என்று கூறியிருக்கிறார். இவ்வாறு மேலை நாட்டினரையும் கவர வல்லது தமிழிலக்கணம் என்றறிக.

தமிழிலக்கண வளர்ச்சி

தமிழிலக்கணம், தொன்மைமிக்கதாயினும், காலத்துக்கு ஏற்றவாறு வளர்ந்து வந்துள்ளது. அது நீர் தேங்கிக் கிடக்கும் குளத்தைப்போல் இல்லை; ஓடிவரும் ஆற்றைப்போல் இருந்து வருகிறது. கி. மு. 3-ஆம் நூற்றுண்டில் தொல்காப்பியம் தோன்றியது. அது எழுத்து, சொல், பொருள் என்னும் முப் பகுதியையுடையது. எழுத்ததிகாரம் எழுத்துக்களைப்பற்றியும், சில எழுத்துக்களின் வடிவத்தைக் குறித்தும், சொல்லுக்கு முதலிலும் இடையிலும் இறுதியிலும் இன்ன இன்ன எழுத்துக்கள் வரும் என்பதுபற்றியும் எழுத்துக்களின் பிறப்புக் குறித்தும் சந்தி வகைகளைப்பற்றியும் கூறுகிறது. சொல்லதிகாரம் பெயர், வினை, இடை, உரி முதலியவற்றைப்பற்றித் தெரிவிக்கிறது. பொருளதிகாரமோ நூலியற்றுதற்குரிய பொருளிலக்கணத்தை அகத்திணை இயல், புறத்திணை இயல், களவியல், கற்பியல், பொருள் இயல், மெய்ப்பாட்டு இயல், உவமை இயல், செய்யுள் இயல், மரபுஇயல் என்று ஒன்பது இயல்களால் கூறுகிறது. எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் தனித்தனி ஒன்பது ஒன்பது இயல்களை உடையனவே. கி.பி. 7-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவரான ஐயனரிதனர் புறப்பொருளிலக்கணத்தைச் சில மாற்றங்களுடன் புறப்பொருள் வெண்பா மாலை என்ற நூலாக இயற்றினர். கி பி. 8-ஆம் நூற்றுண்டில் இறையனர் என்ற புலவர் அகப்பொருள் என்று தெளிவாக ஒரு நூலைத் தமிழுலகுக்கு அளித்தார். அது தான் இறையனர் அகப்பொருள் என்னும் பெயருடன் விளங்குகிறது. இதற்குப் பிற்கால நக்கீரர் உரை இயற்றியுள்ளார். கி.பி. 11-வது நூற்றுண்டில் அமிதசாகரர் என்பவர் பல மாற்றங்களுடன் புதிய பாவினங்களைச் சேர்த்து அக்காலத்துக்கு ஏற்றவாறு யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை என்று முன்னதை விரிவாகவும் பின்னதைச் சுருக்கமாகவும் இயற்றினர். இரண்டாம் குலோத்துங்கன் காலமாகிய கி பி. 12-ஆம் நூற்றுண்டில் தண்டி என்ற பெயர் அமைந்த தமிழ்ப்புலவர் வடமொழி நூலாகிய காவ்யதர்சத்தைத் தழுவி விரிவாகத் தண்டியலங்காரம் என்னும் அணி இலக்கணத்தை இயற்றினர். தொல்காப்பியர்

கூறியது உவமை அணி ஒக்றே. தண்டியாசிரியர் கூறிய அணிகள் நூறுகும். கி. பி. 12-ஆம் நூற்றுண்டின் இறுதியிலோ 13-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலோ வாழ்ந்த பவணந்தி முனிவர் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்திலக்கணங்களையும் இயற்றியிருத்தல் வேண்டும். "அரும்பொருள் ஐந்தையும் யாவரும் உணர" என்று நன்னூல் சிறப்புப்பாயிரம் கூறுகிறது. "தமிழ் நன்னூல் துறைகள் அஞ்சுக்கும் இலக்கியம்" என்று திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழிக்குரிய தனியன் கூறுவதும் இவ்வுண்மையை வலியுறுத்தும். ஆனல், எழுத்தும் சொல்லும் தவிர மற்றைய மூன்றும் சிறப்பின்மையால் அழிந்துபட்டன போலும்.

மாறவர்மன் குலசேகரன் காலத்தில் (கி.பி. 1216—1318) நாற்கவிராசநம்பி அகப்பொருள் நூலை இயற்றினர். மாறன் அகப்பொருள், மாறன் அலங்காரம் என்னும் இரு நூல்களும் கி.பி. 16-ஆம் நூற்றுண்டில் திருக்குருகை பெருமாள் கவிராயரால் இயற்றப்பெற்றன. கி.பி 17-ஆம் நூற்றுண்டில் குமரகுருபரர் சிதம்பரச் செய்யுட்கோவை என்னும் யாப்பிலக்கண நூலை இயற்றினர். பிற்காலத்தில் பல பாட்டியல் இலக்கணங்கள் தோன்றின. இலக்கண ஆராய்ச்சி வகையில் பிரயோக விவேகம், இலக்கணக்கொத்து என்னும் இரு நூல்கள் பிற்காலத்தில் எழுந்தன. கி. பி. 11-ஆம் நூற்றுண்டில் வடமொழி இலக்கணத்தைத் தழுவி வீரசோழியம் எழுந்தது. இவ்வாறு பல இலக்கண நூல்கள் தொடர்ந்து வெளிவந்தன.

தொல்காப்பியத்துக்கும் நன்னூலுக்கும் எழுத்திலக்கணத்திலும் சொல்லிலக்கணத்திலும் காலத்துக்கு ஏற்ற வேறுபாடுகள் உள்ளன. தொல்காப்பியர் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் ஆகிய இவையே சார் பெழுத்துக்கள் என்றார். நன்னூலார் 369 சார்பெழுத்துக்கள் என்றார். தொலைகாப்பியர், "ஆ, ஏ, ஓ, அம் மூன்றும் வின" என்று கூற, நன்னூலார் 'யா' என்பதையும் சேர்த்து வினவை நான்காக்கினர். தொல்காப்பியர், அளபெடையைப்பற்றிக் கூறுங்கால், "இசை குறைவான மொழியிடத்தில் நெட்டெழுத்துக்குப் பின்னர் அவைக்கு இனமான குற்றெழுத்து அமைந்து நின்று இசையை நிறைக்கும் என்று கூற, நன்னூலார், "நெட்டெழுத்துக்களே அளபெழும்; இனக்குற்றெழுத்துக்கள் அடையாளமாக நிற்கும்" எனக் குறிப்பிட்டார். நன்னூலார், தொல்காப்பியத்தில் கூறப்பட்ட 'வற்றுச்சாரியையை 'அற்று' என்றும், அக்குச்சாரியையை 'அ' என்றும், இக்குச்சாரியையைக் 'கு' என்றும் கூறினர்; ஒன்சாரியையை விட்டொழித்தார். அற்று

என்று நன்னூலார் கூறியது பொருத்தமாகும். உடம்படுமெய் இன்றியும் எழுதலாம் என்பது தொல்காப்பியர் கருத்தாக இளம்பூரணரும் நச்சினர்க்கினியரும் கூறியுள்ளார்கள். இது பொருத்தமாக இருப்பதற்கு மாயிருஞாலம், பாயிருள் பருகி, கோயில், கோவில் என்னும் எடுத்துக்காட்டுக்கள் சான்றுகளாகும். நன்னூலாரோ.

> "இ, ஈ ஐவழி யவ்வும் ஏனை
> உயிர்வழி வவ்வும் ஏமுனிவ் விருமையும்
> உயிர்வரின் உடன்படு மெய்யென்றாகும்"

என்று யகர உடம்படுமெய்க்கும் வகர உடம்படுமெய்க்கும் வரையறை செய்துவிட்டார்.

தொல்காப்பியர் வியங்கோள் வினைமுற்று படர்க்கையில் மட்டும் வரும் என்று கூறப் பவணந்தி முனிவர் தன்மை முன்னிலை படர்க்கை ஆகிய இடங்களில் வியங்கோள் வருதல் உண்டெனக் குறிப்பிட்டார். தொல்காப்பியர் பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம் என, நன்னூலார் இசை நிறையைச் சேர்த்து ஏகாரம் ஆறு என்றார். தொல்காப்பியர் ஆறு ஒகாரம் கூற, நன்னூலார் எட்டு ஓகாரம் கூறினர். தொல்காப்பியர் உரிச்சொல்லைப்பற்றிக் கூறிய கருத்தில் மிகவும் வேறுபட்டார் நன்னூலார். இதுகாறும் கூறியவற்றால் இலக்கணக் கருத்திலும் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. நன்னூலார் கூறியவற்றுள் சில தவறாக உள்ளன. எனினும், இலக்கணக் கருத்து வளர்ச்சி புலப்படுகிறது. ஆதலால், இக்காலத்தாரும் இலக்கணத்தில் சில மாற்றங்கள் செய்வது தவறாகாது.

என்ன மாற்றங்கள் செய்தல் வேண்டும் ?

(1) வல்லெழுத்து ஒரு சொல்லின் ஈற்றில் நிற்காது என்பது, உலகக் கருத்துக்களை எழுதவேண்டிய இந்நாளில் ஏற்புடையதாகாது. வாலாசாபாத் என்றும் இக்காலத்தில் எழுதுவதை ஒப்புக்கொள்ளுதல் வேண்டும்.

(2) டங்கன்துரை 'இடங்கன்' துரை என்றும், டயர் என்பதை 'இடையர்' என்றும், டென்மார்க் என்பதை 'இடன்மார்க்கு' என்றும் லூயுபிஷரை 'உலூயுபிஷர்' என்றும், லூக்கா என்பதை உலூக்கா என்றும், ருஷ்யாவை 'உருஷ்யா' என்றும் எழுத வேண்டியதில்லை.

(3) நாம் ஆட நிலவு வந்ததே! – இந்த ஏகாரம் உவகையைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

அவன் நாள் முழுதும் எழுதிக்கொண்டே இருந்தான்.— இதில் உள்ள ஏகாரத்தைக் கால நீட்டமாகக் கொள்ளலாம்.

(4) வேறு இல்லை உண்டு ஐம்பால் மூவிடத்தன என்று கொள்வதுபோல, அல்ல என்பதையும் ஏன் கொள்வது கூடாது?

(5) பேராசிரியர் சூரியநாராயண சாஸ்திரியார் கீழ் வருங் காலங்களைக் கூறுகிறார்.

1. இறந்தகாலம்

இறப்பில் இறப்பு	—	செய்திருந்தான்
இறப்பில் நிகழ்வு	—	செய்திருக்கிறான்
இறப்பில் எதிர்வு	—	செய்திருப்பான்

2. நிகழ்காலம்

நிகழ்வில் இறப்பு	—	செய்யாநின்றான்
நிகழ்வில் நிகழ்வு	—	செய்யாநிற்கிறான்
நிகழ்வில் எதிர்வு	—	செய்யாநிற்பான்

3. எதிர்காலம் — செய்வான்

இவற்றை ஓரளவு பயன்படுத்தி வருகிறோம். இத்தகைய இலக்கணம் நூலில் புகுதல் வேண்டும்.

(6) துணைவினைகளின் ஆற்றலையும் இனி இலக்கணத்தில் புகுத்தல் நன்று.

காத்தருள் – 'அருள்'– உயர்வு குறித்து வந்த துணைவினை. வேலையை முடித்திட்டான். – 'இடு' என்பது உறுதிப்பாட்டைக் குறிக்கிறது.

நான் போனபோது அவன் படுத்திருந்தான் – இங்கு 'இரு' என்பது நிலைமையைக் குறிக்கிறது.

அவன் திருக்குறளை நாள்தோறு மனப் பாடம் செய்து வருகிறான். – இங்கு 'வா' என்பது வழக்கத்தைக் குறிக்கிறது.

இவைபோன்றவற்றைப் பன்மொழிப் புலவர் வே. வெங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள் தமது இலக்கணப் பாட நூலில் எடுத்துக்காட்டியுள்ளார்கள். திரு. தேவநேயப்பாவாணர் அவர்கள் பல சொற்களுக்குரிய பொருள் வேறுபாடுகளைக் கண்டு பிடித்து எழுதியுள்ளார்கள். நானும் 'நல்ல தமிழ் எழுத வேண்டுமா' என்னும் நூலில் உரைநடை இலக்கணத்தை எடுத்துக்காட்டியுள்ளேன். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழ்

கற்பிக்கும் ஆசிரியப் பெருமக்கள் அரைத்தமாவையே அரைக்காது, கரைத்த மாவையே கரைக்காமல் தமிழ் மரபு ஒட்டிப் புதியனவாகப் பலர் கூறுவனவற்றைப் பொருத்தமாக இருப்பதை ஆராய்ந்து கண்டு மாணாக்கர்களுக்கும் மாணாக்கியருக்கும் கற்பித்தால் இலக்கண வளர்ச்சி ஏற்படும் என்று கருதுகிறேன். அவ்வாறு இலக்கண வளர்ச்சிக்கு நல்லமுறையில் தொண்டுபுரியுமாறு ஆசிரியர்களை வேண்டுகிறேன்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினனே."

தொல்காப்பியத்தைக் குறித்த என் எண்ணம்

தமிழ்நெறி காவலர், பேராசிரியர்
மயிலை. சிவமுத்து அவர்கள்

மொழியின் தோற்றமும் வளர்ச்சியும் :

நம் தமிழ்நாடு உலகில் உள்ள நாடுகளில் மிகவும் தொன்மை வாய்ந்த நாடு. அஃதே போன்று நமது தமிழ்மொழியும் மிகமிகத் தொன்மை வாய்ந்த மொழியே யாகும். அன்றியும் உலக மக்கள் பேசுதற்கும் எழுதுதற்கும், வழிகாட்டியாக இருந்த ஒரு சில நாடுகளில் நம் நாடு முன்னணியில் நிற்கும் நாடு என்றும் கூற லாம். 'அகர முதல எழுத்தெல்லாம்' என்று வள்ளுவர் கூறி யது நம் நாட்டு மொழியின் சிறப்பையே முதலில் குறிக்கும். விலங்குகள் போன்று பொருள் இல்லா ஒலிகளை எழுப்பித் திரிந்த பண்டைக் கால மக்களுள் நம்நாட்டு மக்களே முதலில் 'ஆ' என்று ஆச்சரிய ஒலிக்குறிப்பை எழுப்பியும், 'ஈ' என்று வெறுப் புத் தோன்றக் கூறியும், 'ஊ' என்று அச்சம் தோன்ற உரைத் தும் பொருளுடன் ஒலிக்கத் துவங்கினர். பிறகே உயிரும் மெய் யும் தோன்ற 'அம்' என்று தாயைச் சுட்டிக் கூறவும், 'அப்' என்று தந்தையைச் சுட்டித் தெரிவிக்கவும் நம் நாட்டுப் பழங் கால மக்கள் முயன்றனர். இவைகட்கு அடுத்தபடியாகப் பழத் தைப் பார்த்து ஆச்சரியம் தோன்றப் 'பழ்' என்றும் காயைப் பார்த்து வெறுப்புத் தோன்றக் 'காய்' என்றும் தெரிவிக்க முயன்று இருத்தல் கூடும். இங்ஙனமே படிப்படியாக, மாகறல் கார்த்திகேய முதலியார் கருத்துப்படி, 'சுள்' என்னும் மொழி யைக் கதிரவன் வெப்ப நிலையை உணர்த்தும் மொழியாகவும் அதன் மூலமாகப் பிற மொழிகளையும் மக்கள் கூறி அவைகளின் பெயர்களைப் பிறருக்குத் தெரிவிக்க முயன்று வந்திருத்தல் கூடும். அப்பா, அம்மா, மாமா, தாத்தா முதலிய பெயர்களையும் கல், மண், மரம், பூ முதலிய பலப்பல பெயர்களையும் அறிந்தனர். இங்ஙனமே வா, போ, நட, நில் முதலிய வினைச் சொற்களையும்

மக்கள் தெரிந்து கூறத் துவங்கி யிருக்கலாம். நமது தொன்மை இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் இந்த முறையை ஒட்டியே உயிரெழுத்து வரிசை முறையினையும், மெய்யெழுத்து வரிசை முறையினையும் தொல்காப்பியனுர் அமைக்கலாயினர். அந்த முறையினை முதன் முதலில் வகுத்துத் தெரிவித்தவர் தொல்காப்பியரே என்று நாம் முடிவு கட்டிவிடுதல் கூடாது. அவருக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்டு முன்பிருந்த அறிஞர்களே அவ்வாறு அமைத்து வழங்கி வந்தனர் என்றே நாம் நம்ப வேண்டியிருக்கிறது.

அகத்தியம்

இன்றைய நிலையில் நமக்கு முதல் நூலாக இருப்பது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலே ஆகும். அவருக்கு முன்பே அகத்தியர் என்னும் முனிவர் அகத்தியம் என்னும் இலக்கண நூலை இயற்றினர் என்னும் செய்தியும் நம் நாட்டில் வழக்கில் இருந்து வருகிறது. அந்த நூல் இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழுக்கும் இலக்கணம் உடைய நூல் என்றும் நமது முன்னோர் கூறியுள்ளனர். அகத்தியம் என்னும் அந்த நூல் முதற் கடற்கோளால் கொள்ளப்பட்ட தென் மதுரை என்னும் இடத்தில் அரங்கேற்றப் பட்டதாகவும், அக்காலத்து அறிஞர்கள் அதையே தம் இலக்கண நூலாகக்கொண்டு இலக்கிய நூல்கள் யாக்கத் துவங்கினர் என்றும் இறையனுர் இயற்றிய களவியல் நூலின் உரையாசிரியர் மூலம் நமக்குத் தெரிய வருகிறது. அதன் வழிநூலே தொல்காப்பியர் இயற்றிய இலக்கண நூலாகும் என்றும், அந்நூல் இரண்டாம் முறையாகக் கடலால் கொள்ளப்பெற்ற கபாடபுரம் என்னும் இடத்தில் அரங்கேற்றப்பெற்றது என்றும், அதே உரையாசிரியர் மூலம் நாம் அறிகின்ருேம். இக்களவியல் உரையின் காலம் கி. பி. 11 அல்லது 12-ஆம் நூற்ருண்டாகும் என்று பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் குறிப்பிடுகின்றனர்[1].

அகத்தியம் என்னும் முத்தமிழ் இலக்கண நூலைச் செய்த அகத்தியரே தொல்காப்பியர்தம் ஆசிரியர் என்றும், அவர்கட்குள் நேர்ந்த பகைமை காரணமாகவே தொல்காப்பியம் என்னும்

1. இலக்கிய தீபம் பக்கம் 29

2. டாக்டர், மா. இராசமாணிக்கனுர், தமிழ்மொழி - இலக்கிய வரலாறு பக்கம் 104

இந்த அரிய இலக்கண நூலைத் தொல்காப்பியர் இயற்றினர் என்றும் ஒரு கதை நம் நாட்டில் வழங்கி வருதலையும் நாம் அறிவோம். இக்கதையை முதன் முதலில் தம் உரையில் கூறியவர் கி. பி. 15 அல்லது 16-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த நச்சினர்க்கினியர் ஆவர்[2]. அந்தக் கதையைத் தவிர அகத்தியரைக் குறித்த உண்மை வரலாறே, தொல்காப்பியரைக் குறித்த வாழ்க்கை வரலாறே நமக்குக் கிடைக்கவில்லை. அகத்தியரைக் குறித்து ஒரு சிறிதேனும் உண்மைச் சான்றுடன் நாம் அறிந்துகொள்ள அவர் இயற்றிய அகத்தியம் என்னும் நூலே நமக்குக் கிடைக்கவில்லை. ஆதலால் முதற் சங்க அகத்தியரால் இயற்றப் பெற்றதாக உரையாசிரியர்கள் எடுத்துக் காட்டும் ஒன்று இரண்டு சூத்திரங்களைத் தொல்காப்பியருக்கு முற்பட்டனவாக ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை[3].

தொல்காப்பியர் அகத்தியரின் மாணவராய் இருப்பின் அவர் பெயரை எங்கேயாவது குறிப்பிட்டிருப்பார். அவர் காலத்தே உடனிருந்த பனம்பாரனர் என்பவரேனும் தம் சிறப்புப் பாயிரத்தில் குறிப்பிட்டிருப்பார். ஏறத்தாழ கி. பி. 10 அல்லது 11-ஆம் நூற்றுண்டில் செய்யப் பெற்றதாகக் கருதபெறும் பன்னிரு படலப் பாயிரத்தில்தான் அகத்தியர் பெயரும் அவர் மாணவர் பன்னிருவர் பெயர்களும் காணப்பெறுகின்றன. யாப்பருங்கல விருத்தியும் அதன் உரையும் கி. பி. 10-ஆம் நூற்றுண்டில் செய்யப் பெற்றன. அவ்வுரையில் அகத்தியர் சூத்திரங்கள் சில காணப் படுகின்றன. இவற்றை நோக்கும்போது அகத்தியர் - தொல்காப்பியர் பற்றிய கதை ஏறத்தாழக் கி. பி. 10-ஆம் நூற்றுண்டில் தோன்றியிருத்தல் கூடும் என்பது தெரிகின்றது. இவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்த அறிஞர் K. N. சிவராஜப் பிள்ளை அவர்கள் தொல்காப்பியருக்கு முற்பட அகத்தியர் என்ற ஒருவர் இலக்கணம் செய்தமைக்குத் தக்க சான்றில்லை என்று தம் ஆராய்ச்சியில் விளக்கியுள்ளார்.[4] 1929 ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகச் சார்பில் விரிவுரையாற்றிய பேராசிரியர் கா. நமசிவாய முதலியார் அவர்கள் "அகத்தியர் வெறுங் கட்டுக்கதை" என்னும் தலைப்பில் மூன்று சொற்பொழிவுகள் ஆற்றினர்.

2. K. N. Sivarja Pillai, Agastya in the Tamil land
3. S. Vaiyapuri Pilli, History of Tamil Language and Literatnreu p. p, 62-65
4. Vide his Agastya in the Tamial Land.

தொல்காப்பியத்திற்கு முற்பட்ட நூல்கள் :

"இலக்கியம் இன்றேல் இலக்கணம் இன்று" என்னும் கொள்கை அறிஞர் அனைவர்க்கும் ஒப்பமுடிந்த ஒன்று ஆகும். ஆதலின் தொல்காப்பிய இலக்கணம் வெளிவருவதற்கு முன்பே பலப்பல இலக்கியங்கள் இருந்திருத்தல் வேண்டும். அந்த இலக்கியங்கட்கு ஏற்பவே தொல்காப்பியர் தம் அரிய இலக்கணத்தை இயற்றியிருத்தல் வேண்டும். கடைச் சங்க கால இலக்கியங்களில் தொல்காப்பியர் இலக்கணத்துக்கு முரணான இலக்கண விதிகள் காணப்படுகின்றன. உதாரணமாகத் தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் "சகரக் கிளவியும் அவற்றோரற்றே, அ, ஐ, ஔ எனும் மூன்றலங்கடையே" என்றும்; "ஆ, ஏ, ஓ எனும் மூவுயிர் ஞகாரத்துரிய" என்றும், "ஆவோடல்லது யகரம் முதலாது" என்றும் கூறியிருக்கக் கடைச் சங்க இலக்கியங்களில், "சமழ்த்தல், சட்டி, சதுக்கம்" என்பனபோன்ற சொற்களும், "ஞமலி, ஞிமிறு போன்ற சொற்களும், "யவனர், யூகம்" என்னும் சொற்களும் தொல்காப்பிய விதிக்கு முரணான சொற்களாக உள. அந்த இலக்கியங்கட்குப் பின்னர்த் தொல்காப்பியர் இலக்கணம் வகுத்திருப் பரேல் அந்தச் சொற்களுக்கு ஏற்ற வண்ணம் இலக்கணம் வகுத்திருப்பர். அவர் அங்ஙனம் செய்யாமையின், கடைச்சங்க கால இலக்கியங்கட்கு முற்பட்டது தொல்காப்பியம் என்பது பெறப்படுகிறது. ஆதலின் தொல்காப்பியர் தம் காலத்துக்கு முன்னர் இருந்த இலக்கியங்களைக் கொண்டே தம் இலக்கண நூலை வகுத்துள்ளனர் என்பது தெளிவு.

தொல்காப்பியத்துக்கு முன்பே பல இலக்கண நூல்கள் இருந்திருத்தல் வேண்டும் என்பதற்கு அகச்சான்றுகளாகத் தொல்காப்பிய இலக்கணத்திலிருந்தே நாம் கொள்ளலாகும். உதாரணமாக டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள் தமது "கால ஆராய்ச்சி"[5] என்னும் நூலில், தொல்காப்பியச் சூத்திரங்களிலிருந்து "என்ப-மொழிப" என்னும் சொற்றொடர் 147 இடங்களில் வருவதையும் 'என்மனார்புலவர்'என்னும்சொற்றொடர்சுமார் 68 இடங்களில் வந்துள்ளதையும் "வரையார்" என்னும் சொற்றொடர் 15 இடங்களில் வந்துள்ளது என்பதையும் சுட்டிக்காட்டுவதோடு சிறப்பாக 28 இடங்களைத் தம் ஆராய்ச்சிக் கட்டுரை

5. பக்கம் 6-7

யில் எடுத்துக் காட்டியுள்ளனர். தொல்காப்பியர் "நல்லிசைப் புலவர்... வகுத்துரைத்தனரே" (சூத்திரம் 310) என்றும், "இடையும் வரையார் தொடையுணர்ந்தோரே" (சூத்திரம் 375) என்றும், "தோலென மொழிப தொன்னெறிப் புலவர்" (சூத்திரம் 539) என்றும் "சூத்திரத்தியலப்பென யாத்தனர் புலவர்" (சூத்திரம் 646) என்றும் தம் இலக்கண நூலில் ஆங்காங்கே தெரிவித்திருத்தல், அவர் காலத்துக்கு முன்பே பலப்பல இலக்கண வல்லுநர்கள் இருந்தனர் என்பதையும் அவர்கள் தொல்காப்பியருக்கு முன்பே பலப்பல இலக்கண நூல்களை இயற்றியிருத்தல் கூடும் என்பதையும் உணர்த்துவதாகும். பேராசிரியர்களாய நாவலர் சோமசுந்தர பாரதியாரும்[6], வித்துவான் க. வெள்ளைவாரணனும்[7], சி. இலக்குவனர்[8] அவர்களும் பிறரும் இதே கருத்தினைத் தம் கட்டுரைகளில் தெரிவித்திருப்பதும் போதிய சான்றுகளாகும்.

தொல்காப்பியத்தின் பழைமை :

இலக்கியத் துணைகொண்டே இலக்கணம் வகுப்பர் ஆதலின் தொல்காப்பியர் கூறும் இலக்கண ஆசிரியர்கட்கு முன்பே பல இலக்கிய ஆசிரியர்கள் இருந்திருத்தல் வேண்டும் என்பதும் அவர்கள் பலப்பல செய்யுட்களோ, நூல்களோ இயற்றியிருத்தல் வேண்டும் என்பதும் நமக்குத் தெரியவருகின்றன. இது முன்பும் கூறப்பட்டுள்ளது.

எழுத்தில் ஒலிவடிவு, வரிவடிவு என இருவகை எழுத்துக்கள் உள்ளதைப் பலரும் அறிவர். ஒலிவடிவு தோன்றி நெடுங்காலம் கழிந்த பிறகே வரிவடிவு தோன்றுதல் இயல்பு.

இந்தக் காலத்திலும் பல மொழிகள் வரிவடிவு இல்லாமலே இருத்தலை நாம் கண்கூடாகக் காணலாகும். வடமொழி நெடுங்காலம் வரையில் ஒலி வடிவிலேயே இருந்து வந்தது. அதனால் அன்றோ ஆரியர் தங்கள் வேதங்களை வாய்மொழியாகவே பயின்று வந்தனர்.

நம் தமிழ் நாட்டிலும் மிகப் பழங்கால மக்கள் முதலில் ஒலி வடிவைக் கொண்டே தம் எண்ணங்களை ஒருவருக்கொருவர்

---

6. ச. சோ. பாரதியார்... "தொல்காப்பியம்" கலைக் களஞ்சியம், தொகுதி-6
7. க. வெள்ளைவாரணனுர் ... இலக்கிய வரலாறு-தொல்காப்பியம்.
8. சி. இலக்குவனர்...தொல்காப்பிய ஆராய்ச்சி.

தெரிவித்து வந்திருத்தல் வேண்டும். நம் தமிழ் மொழிக்கு வரி வடிவு அமைந்த பின்னரும் நெடுங்காலம் மந்திரம், மருத்துவம் முதலியவைகளை வாய்மொழி மூலமாகவே மிகவும் இரகசியமாக ஒருவருக் கொருவர் கற்பித்து வந்திருத்தல் வேண்டும். அவ் விதமே இயல், இசை, கூத்து முதலியவைகளின் இலக்கணங் களையும் வாய்மொழி மூலமாகவே ஒருவருக்கொருவர் கற்பித்து வந்திருத்தல் வேண்டும். இலக்கிய சம்பந்தமான நூல்களே வரி வடிவில் அமைத்து அவைகளை ஓலைச் சுவடியில் எழுதியிருத்தல் வேண்டும். பன்னெடுங்காலம் கழிந்த பின்னரே இயல், இசை, நாடக இலக்கண நூல்களை ஓலைச் சுவடியில் நம்நாட்டவர் எழுதி வைத்திருத்தல் வேண்டும். அவற்றுக்குப் பின்னரே தொல்காப் பியம் தோன்றியதெனலாம்.

தொல்காப்பியர் தம் காலத்தில் இருந்த பல்வேறு இலக்கண நூல்களிலும், தமக்கு முன்பிருந்த பல்வேறு இலக்கண நூல்களி லும் உள்ள அரிய கருத்துக்களையும் தொகுத்து மக்களுக்கு வேண் டிய வகையில் தாமே சூத்திரம்யாத்துத் தொல்காப்பியம் என் னும் நூலினை அதங்கோட்டாசான் முன்னிலையில் கபாடபுரம் என்னும் இடத்தில் அரங்கேற்றினர். தொல்காப்பியர் காலத்து இருந்த பனம்பாரனர் என்னும் புலவர்பெருமான் இயற்றியுள்ள சிறப்புப்பாயிரமும் தொல்காப்பியத்தின் இடையே குறிக்கப் பெறும் சூத்திரங்களும் இம்முடிபிற்குத் தக்க சான்றுகளாக உதவு கின்றன.

தொல்காப்பியர் சிறப்பாக நம் தமிழ் நாட்டுக்கு உதவும் முறையில் ஐந்திரம் என்னும் வடமொழி இலக்கணத்தையும் படித்துப் பார்த்து நம் தமிழ் நாட்டு இலக்கண இலக்கியங்களை யும் படித்துப் பார்த்து அவைகளில் உள்ள செய்திகளை மட்டும் சுருக்கித் தொகுத்துத் தாமே சூத்திர வடிவில் தொல்காப்பியம் என்னும் இந்த அரிய இலக்கணத்தை இயற்றி யிருக்கின்றனர். "வடவேங்கடம் தென்குமரி" என்னும் நாட்டு எல்லையைப் பனம்பாரனர் கூறியிருப்பதும், "எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச் செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு முறைப்பட எண்ணிப் புலந் தொகுத்தோன்" என்று குறிப்பிடுவதும் இதனை உறுதிப்படுத்துகின்றன. பண்டைத் தமிழ் இலக்கண இலக்கி யங்களைப் படித்துப் பார்த்தும், செந்தமிழ் நாட்டு இயற்கை நிலையை எண்ணிப் பார்த்தும் மக்களுக்கு இலக்கணத்தில் மயக் கம் தோன்ருவகையில் தொல்காப்பியம் என்னும் இந்த நூலை

இயற்றித் தம்மை அனைவரும் "தொல்காப்பியன்" என்று அழைக்கும் வண்ணம் இந்த நூலாசிரியர் செய்து கொண்டார் என்பதையே பனம்பாரனார் தம் சிறப்புப் பாயிரத்தில் கூறுகின்றார்.

தொல்காப்பியத்தின் தனிப்பெருஞ் சிறப்பு

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று பெரும் பிரிவுகளை உடையது. மொழியின் உயிர்நாடியாகிய எழுத்துக்களைக் கூறுவது எழுத்ததிகாரம்; எழுத்துக்களால் ஆகிய சொற்களைச் சொற்களால் ஆகிய தொடர்களைக் கூறுவது சொல்லதிகாரம்; இவ்வெழுத்துக்களையும், சொற்களையும் பயன் படுத்திய தமிழ் மக்களது வாழ்க்கையைத் தெரிவிப்பது பொருளதிகாரம். உலகிலுள்ள வேறு எம்மொழி இலக்கண நூலிலும் இம் மூன்று பாகுபாடுகளையும் காண்பது இயலாது. மக்களது வாழ்க்கைக்கே இலக்கணம் கூறிய பெருமை தமிழனுக்கே உரியது.

திரு. T. R. சேஷ ஐயங்கார்[9] அவர்கள் கூறுவது போலப் பண்டைத் தமிழ் மக்களின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் விளக்கும் நூல்களுள் தொல்காப்பியம் தலைசிறந்ததாகும். அதில் கூறப்பட்டுள்ள பொருள் தமிழ் மக்களின் வரலாறேயாம். பண்டைத் தமிழகத்தின் உயிரே யாகும். அதனாற்றான் இப்பண்டை நூல் இன்றளவும் புகழப் பெற்றும் பாதுகாக்கப் பெற்றும் வருகின்றது.

முடிவு: தொல்காப்பியர் மாநாடு என்று ஒரு மாநாடும் கூட்டி, அதற்கு ஏற்ப ஓர் அரிய மலரையும் மகாவித்துவான், சிந்தாமணிச் செல்வர், மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர் தம் 68-ஆம் பிறந்தநாள் விழாவில் வெளியிடுவது நம் தமிழ் நாட்டில் ஒரு புதுமையும் மிகமிகப் பொருத்தமும் ஆகும். ஆகவே அந்த இலக்கணப் பேரறிஞரையும், விழாக் குழுவினரையும் நான் உளமாற வாழ்த்திப் போற்றுகின்றேன்.

9. Vide his Dravidian India, p p. 91-92.

ஊர்ப்பெயர்கள்-மரூஉ

டாக்டர் மா. இராசமாணிக்கனார்
தமிழ்த்துணைப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்.

மக்களுக்குப் பெயர்கள் இடப்படுகின்றன. இங்ஙனமே, ஊர்கட்கும் பிறவற்றுக்கும் பெயர்கள் இடப்படுகின்றன. ஒவ்வொரு பெயரும் ஒரு காரணத்தோடுதான் வைக்கப்படும். ஆதலால் தொடக்கத்தில் அப்பெயர் தன் முழுவடிவத்துடன் உச்சரிக்கப்படும்; ஆயின், காலப் போக்கில் மக்களது தவறான உச்சரிப்பாலும் ஓசைச் சிக்கனத்தாலும் அப்பெயர் சுருக்கத்தை அடையும்; சில சமயங்களில் தன் வடிவத்தில் பெரு மாறுதலையும் பெறும்; அங்ஙனம் பெரு மாறுதலைப் பெறும்பொழுது தன் பொருட் சிறப்பை இழந்துவிடும். இங்ஙனம் சுருங்கியும் உரு மாறியும் வழங்குதல் மரூஉ என்று இலக்கணத்தில் பெயர்பெறும்.

மலையமான் நாடு - மலையமாளுடு என வழங்கும். இது காலப்போக்கில் மக்களால் மலாடு எனப்படும். மலாடு என்னும் வழக்குத் தொன்றுதொட்டு வருவதன்று; மலையமாளுடு என்பதில் உள்ள எழுத்துக்கள் கெட்டும் திரிந்தும் 'மலாடு' என்பது தோன்றும். இவ்வாறு தொன்றுதொட்டு வருதல் இல்லாமல் எழுத்துக்கள் கெட்டும் திரிந்தும் தோன்றியும் இலக்கணம் சிதைந்து காலப்போக்கில் தானே மருவி வழங்குவது மரூஉ எனப்படும். இம்மரூஉ தகுதி வழக்கைச் சேர்ந்தது என்று இலக்கண ஆசிரியர்கள் ஒப்புக்கொண்டனர். கி. பி. 800 முதல் கி. பி. 1600 வரையில் கல்வெட்டுகளிற் பயன்படுத்தப்பட்ட ஊர்ப்பெயர்கள் இன்று எவ்வாறு மருவி வழங்குகின்றன என்பதைக் கீழுள்ள பட்டியலைக் கொண்டு நன்கறியலாம்.

பழைய பெயர்	கல்வெட்டுச்சான்று	இன்றுள்ள பெயர்
1. கிடங்கில்	204-1902	கிடங்கல், கிடங்கால்
2. வில்லிப்பாக்கம்	178-1936-37	வில்லிவாக்கம்
3. வயிரமேகபுரம்	253-1913	வயிரபுரம்
4. மணற்காணம்	23-1919	மரக்காணம்
5. முஞ்ஞூறு	50-1919	முன்னூர்

204—1902 என்பதற்கு—
1902 ஆம் ஆண்டுக் கல்வெட்டு அறிக்கை நூலில் உள்ள 204 ஆம் எண்ணுள்ள கல்வெட்டு என்பது பொருள்.

6. உலகமகாதேவிபுரம்	127-1919	ஒலகபுரம்
7. கிளிஞலூர்	155-1919	கிளியனூர்
கிளிநல்லூர்	156-1919	
கிளிநலூர்	147-1919	
கிளிவளநல்லூர்	154-1919	
8. அரங்கமங்கலம்	426-1922	அனந்தமங்கலம்
9. விக்கிரம பாண்டியபுரம்	289- 1915	விக்கிரவாண்டி
10. உலக்கையூர்	351-1919	ஒலக்கூர்
11. இரட்டகுல காலபுரம்	389-1925	ரெட்டணை
12. பைசாறு	247-1901	பசியார்
13. மகாதேவிமங்கலம்	39-1933-34	மாதிமங்கலம்
14. பிராய்மலை (சங்ககாலப் பரம்புமலை)	163-1935-36	பிரான்மலை
15. திரையனூரேரி	224-1922	தென்னேரி
16. பயினூர்	109-1932-33	பையனூர்
17. சதிரவாசகன் பட்டினம்	173-1932-33	சதுரங்கப்பட்டணம்
சத்ராஸ் பட்டினம்	ARE, 1909, p. 123	
18. சோகண்டி	21-1932-33	சோவண்டி
19. தாம்புரம்	50-1932-33	தாம்பரம்
20. ஆணியூர்	76-1932-33	ஆனூர்
21. கொற்றமங்கலம்	89-1932-33	கொட்டிமங்கலம்
22. குன்றப்பாக்கம்	96-1932-33	குன்னவாக்கம்
23. சிறிதவூர்	S. I. I. 1- 42	சிறுதாவூர்
24. வானவன்மா தேவிச் சதுர்வேதி மங்கலம்	147-1932-33	மாணுமதி
25. உரோடகம்	S. I. I. 3. 57	
உரடகம்	248-1913	ஒரகடம்
26. திருக்கருகாவூர்	S. I. I. 3. 123	திருக்களாவூர்
27. அந்துவனல்லூர்	S. I. I. 3. 139	அந்தநல்லூர்
28. உத்தரமேரு	S. I. I. 3. 171	உத்தரமல்லூர்
29. தாயனூர்	S. I. I. 3. 175	தையனூர்
30. சேணைக்கு		

	மீண்டான் வாசல்	104-1942-43	சந்தவாசல்
31.	பட்டாலம்	S. I. I. 3. 197	பட்டாளம்
32.	சிற்றியாற்றூர்	S. I. I. 3. 198	சித்தாத்தூர்
33.	சதுர்வேதிமங்கலம்	S. I. I- 3. 205	சருப்பேதிமங்கலம்
34.	அருட்டுறை	S. I. I. 3. 205	அரட்டுறை
35.	நென்மலி	14-1932-33	நெம்மலி
36.	திருவிடைச்சுரம்	16- ,,	திருவடிசூலம்
37.	சாத்தணம்பாக்கம்	25- ,,	சாஸ்த்ரம்பாக்கம்
38.	உழலூர்	22- ,,	உயலூர்
39.	உரத்தூர்	101- ,,	ஒரத்தூர்
40.	திருவேட்கலம்	259.1913	திருவக்குளம்
41.	விழுப்பரையபுரம் விழுப்பரையநாடு	67-1919	விழுப்புரம்
42.	திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலம்	194.1919	திரிபுவனை
43.	காலைப்பாக்கம்	1-1934.95	காலவாக்கம்
44.	படுவூர்	4. ,,	படூர்
45.	நந்திபுரம்	34. ,,	நந்திவரம்
46.	கோமளம்	259-1934-95	ரோகவளம்
47.	மயிலார்ப்பு	261- ,,	மயிலாப்பூர்
48.	திருமயானம்	310- ,,	திருமெய்ஞ்ஞானம்
49.	தண்டுறை	383-1923	தண்டரை
50.	மானவீரச்சதுர் வேதி மங்கலம்	438-1924	மானாமதுரை
	மானமாமதுரச்சதுர் வேதிமங்கலம்	445-1924	
	வானவீரமதுரை	439-1924	
51.	இராசகம்பீரச் சதுர்வேதிமங்கலம்	445-1924	இராசகம்பீரம்
52.	கருமூர்	47-1934-35	கரும்பூர்
	நெருமூர்	272-1912	நெரும்பூர்
	எழுமுர்	283-1903	எழும்பூர்
53.	திருச்சுரம்	131-1896	திரிசூலம்
54.	பல்லவபுரம் பல்லாபுரம்	297-1895	பல்லாவரம்
55.	எள்ளலூர்	3.1934-'35	இள்ளலூர்
56.	செங்கழுநீர்ப்பட்டு	17- ,,	செங்கற்பட்டு
57.	காசிவண்பேடு	43- ,,	காயரம்பேடு

58. வீரபாண்டிய் நல்லூர்	240- ,,	வீரவாண்டி
59. ஐம்பூண்டி	S. I. I. I 131	அம்முண்டி
60. காங்கேயனல்லூர்	S. I. I. I 52	காங்கனூர்
61. கோட்டைவேடு	115-1933-34	கொட்டைமேடு
62. உழந்தை	91-1947-48	உழுந்தை
63. அழும்பில்	223.1314	அம்புகோயில்
64. பரவைபுரம்	317-1917	பணையவரம்
65. கூகையூர்	65-1918	குகையூர்
66. அவிரியூர்	6-1919	அவலூர்
87. சிங்கபுரம்	7.1919	சிங்கவரம்
68. இராசராசபுரம்	8-1919	தாதாபுரம்
69. திருவாய்ப்பாடி	217-1919	திருமல்பாடி
70. சோழகேரளபுரம்	470-1920	சளுக்கி
71. ஸ்ரீ புருஷமங்கலம்	118-1921	சீஷமங்கலம்
72. நல்லூர்	130-1921	நெல்லூர்
73. புகலூர்	145-1921	பொகலூர்
74. தாமரைச்செறுவு	179-1921	தாமல்செருவு
75. விசுலூர்	386-1923	விசூர்
76. வாதவூர்	413-1822	பாதூர்
77. பூக்குன்றம்	424-1922	பூங்குணம்
78. புல்வேளூர்	46-1923	புல்லலூர்
79. வாடாவூர்	161-1923	வாதவூர்
80. சத்துளான்பாடி	236-1927-28	சத்தம்பாடி
81. வழுகூர்	51-1808	வழுவூர்
82. அமணபாக்கம்	S. I. I. II 29	அம்மணம்பாக்கம்
83. திருவிருஞ்சுரம்	177-1939-40	விரிஞ்சிபுரம்
84. சளுக்கிப்பாடி	132-1941-42	சனிக்கவாடி
85. சேற்றுப்பட்டு	161-1941-42	சேத்துப்பட்டு
86. சோறிடான்சேரி	90-1945-46	சோராஞ்சேரி
87. சீயபுரம்	179-1915	சீவரம்
88. மதங்கன்பள்ளி	31-1915	மதனபல்லி
89. பாலையூர்	169-1904	பாலூர்
90. சக்கரமூதூர்	924-140-41	சக்கரமல்லூர்
91. மாவண்டூர்	290-1912	மாமண்டூர்
92. தெள்ளையூர்	S. I. I. 1 54	தெள்ளூர்

93. காவணிப்பாக்கம்	57-1907	காணிப்பாக்கம்
94. மாவலிமங்கலம்	167-1931-33	மகாதேவமங்கலம்
95. கணிகை நல்லூர்	2-1940-41	கணியனூர்
96. பெருநகரம்	47-1898	பென்னுகரம்
97. அனுக்காவூர்	95-1900	அனக்காவூர்
98. காமப் புல்லூர்	254-1938-39	காப்பலூர்
99. பழங்கோளூர்	358-1925	பழங்கோயில்
100. குன்றத்தூர்	106-1941-42	குன்னத்தூர்

சிறப்பு எங்கே?

டாக்டர் மு. வரதராசனார்

தமிழ் மொழியின் எழுத்து முறை சில வகையில் சிறப் புடையதே ஆகும். உயிர்களையும் மெய்களையும் தனித்தனியே பிரித்த சிறப்பு, உயிர்களுள் குறிலையும் நெடிலையும் வேறுபடுத்திய எழுத்துமுறைச் சிறப்பு, மெய்களுள் வன்மை மென்மை இடைமை எனப் பாகுபாடு செய்த சிறப்பு, இவையெல்லாம் நெடுங்கால மாகவே இலக்கண நூலார் போற்றி எடுத்துரைத்து வந்த சிறப்பு ஆகிய எல்லாம் கருதத் தக்கவை ஆகும்,

வல்லெழுத்துக்கள் க ச த ப ட என்பவை வல்லொலி (gdbd) ஆகிய இருவகை ஒலிகளையும் குறிக்கவழங்குகின்றன,

கடல் (k)	அகம் (g)
சாவு (c)	மஞ்சள் (j)
தலை (t)	அதற்கு (d)
படி (d)	வம்பன் (b)
பட்டி (t)	படி (d)

இவ்வாறு ஓர் எழுத்து இருவகை ஒலிகளைக் குறிக்கும் முறை தமிழில் உள்ளதை ஒரு குறை எனச் சிலர் கூறுவர். ஒலியியல் முறைப்படி ஆராய்ந்தால், அதை ஒரு குறை எனக் கொள்ளாமல், அதையும் ஒரு சிறப்பியல்பாகவே கொள்ள இடம் உண்டு.

ஹகர ஒலியுடன் சேர்ந்த வல்லெழுத்துக்கள் சில மொழி களில் உள்ளன. தேவநாகரியில் க-வருக்கம் நான்கு, ச-வருக்கம் நான்கு, த-வருக்கம் நான்கு, ப-வருக்கம் நான்கு, ட-வருக்கம் நான்கு என ஒவ்வொரு வல்லொலியும் நால்வகையாக வேறுபட நான்கு எழுத்து அமைந்திருத்தல் காணலாம். இந்த ஹகர ஒலியுடன் கூடிய வல்லொலிகளுக்குத் தனித்தனியே எழுத் துக்கள் இல்லாதது ஒரு குறை எனக் கூறுவர். ஆராய்ந்து பார்த்தால், இத்தகைய ஹகரம் கூடிய வல்லொலிக்கு உரிய எழுத்துக்கள் பல மொழிகளில் இல்லை என்பதும், இவை அவ்வள வாக இன்றியமையாதன அல்ல என்பதும், இவை உள்ள மொழி களிலும் வரவரப் பயன் குறைந்து வருகின்றன என்பதும் காணலாம். ஆகவே இதை ஒரு குறை என்று கூறுவதற்கு இடமே இல்லை.

தமிழ் எழுத்து முறையைச் சிறப்புடையது என்று போற்றும் போது, அது இயல்பான ஒலிகளைத் தெளிவாக உணர்த்துவ தற்கு மட்டும் உரியதாக இருத்தல் கருதத்தக்கது. தேவை குறைந்த ஒலிகளைப் பெருக்கி அவற்றிற்குக் குறியீடுகள் வகுத்தலும் இங்கு இல்லை. அரிதில் முயன்று ஒலிக்கக்கூடிய ஒலிகளைப் பெருக்குதலும் இங்கு இல்லை. கூடியவரையில், மனித உடம்பில் உள்ள ஒலிக்கருவிகள் இயல்பாக ஒலிக்கக் கூடிய அடிப்படை ஒலிகளுக்கு மட்டுமே இங்கு எழுத்துக்கள் உள்ளன என்று மகிழலாம்.

ஆனால் இன்றைய மொழியியல் அறிஞர் இத்தகைய மகிழ்ச் சிக்கு இடம் தருவதில்லை. குறைவு என்றால் ஒவ்வொரு மொழியும் சிற்சில வகையில் குறை உடையது என்பர். நிறைவு என்றால், ஒவ்வொரு மொழியும் சிற்சில வகையில் நிறைவுடையது என்பர். ஒரு மொழி தனிச் சிறப்புக்கள் சில உடையது என்றும், பிற மொழிகள் குறை உடையன என்றும் கருதுதல் தவறு என்பது அவர் கொள்கை. காலத்தால் வந்த தொன்மைச் சிறப்பு உடையது ஒரு மொழி என்று மகிழ்வதற்கும் இன்றைய மொழியில் அறிஞர்கள் இடம் தருவதில்லை. ஏட்டில் எழுதப்பட்ட மொழியை விட, பேச்சில் வாழும் மொழியையே அவர்கள் மிகுதியாக ஆராய்கின்றனர். இலக்கியத்தில் உள்ளமொழி செயற்கையானது, காலஞ்சென்றது என்பது அவர்களின் கொள்கை. மக்களின் அன்றாடப் பேச்சில் உள்ள ஒலிகளும் சொற்களுமே ஆராய்ச்சிக்கு மிக இயைந்தன என்று அவர்கள் கருதுகின்றனர். ஆகவே, இருபது நூற்றாண்டுகளுக்கு முந்திய இலக்கியத்தில் உள்ள எழுத்துக்களைப் பற்றி அவ்வளவாகப் போற்றாமல், இன்றைய கொச்சை மொழிகளில் உள்ள ஒலிகளை ஆராய்வதிலேயே அவர்கள் மிகுதியாக ஈடுபடுகின்றனர்.

இந்தப் போக்கை ஒட்டிக் காணின், தமிழ்மொழியின் எழுத்துச் சிறப்பை எண்ணி மகிழ்வதற்கு இடம் இல்லாமற் போகின்றது.

ஆயினும், இன்று உள்ள நிலையை எண்ணி மகிழ்வதற்கு இடம் உள்ளதோ எனின், அதுவும் இல்லை. உலகத்தில் உள்ள பல மொழிகள் பிறமொழிகளிடமிருந்து சொற்களைக் கடன் வாங்கு கின்றன. ஆனால், தமிழ்மொழியே, பிறமொழி ஒலிகளையும் கடன் வாங்கவேண்டிய நிலையில் உள்ளது. மணிப் பிரவாள நடையில்

பழகி, கிரந்த எழுத்துக்களில் பயின்ற பிறகு, ஜ ஷ ஸ க்ஷ ஹ என்னும் ஒலிகள் தமிழர் நாவிற்கு இயைந்தனவாகிவிட்டன. ஆகவே, அவற்றிற்கு உரிய எழுத்துக்களும் வேண்டும் என்ற நிலையும் ஏற்பட்டது. வடமொழியின் செல்வாக்கோடு நிற்காமல் தெலுங்கு மொழியின் செல்வாக்கும், உருது மொழியின் செல் வாக்கும் ஏற்பட்ட பிறகு, அந்தத் தேவை மிகுதியாக உணரப் பட்டது. வடமொழியை மிகப் போற்றிய பல்லவர் ஆட்சி, சளுக்கியர் செல்வாக்கு, விஜயநகர நாயக்கர் ஆட்சி, மராத்தியர் ஆட்சி, முகமதிய நவாப் ஆட்சி ஆகிய இவற்றின் காரணத்தால் ஏற்பட்ட தேவைகள் அவை. ஆங்கிலேயர் ஆட்சி நூற்றைம்பது ஆண்டுகள் தழைத்து நின்றபோது, தேவை மேலும் மிகுதியாக உணரப்பட்டது. தமிழ்ப்புத்தகங்களில் ஜ ஷ ஸ க்ஷ ஹ என்னும் எழுத்துக்கள் கலந்து அச்சிடப்படும் நிலை வந்தது. தமிழ் நெடுங் கணக்கிலும் (எழுத்து முறையிலும்) இவை சேர்த்துக் கற்கப்படும் நிலைமை வந்தது. இன்று உலகில் பல மொழிகளில் உள்ள சொற்கள் பலவும் தமிழர் உணர வேண்டிய கட்டாயமும் ஏற் பட்டது. அறிவியல் சொற்களும் ஊர்ப்பெயர்களும் ஆட்களின் பெயர்களும் ஜ ஷ ஸ க்ஷ ஹ என்னும் ஒலிகளை உடைய பெயர் களாகப் பல வந்து சேர்ந்தன. அவற்றை நன்கு உணரவும் இந்த எழுத்துக்கள் தேவையாயின. இன்று தமிழர் பெரும்பாலோர் வரவேற்க வேண்டிய நிலையில் இந்த எழுத்துக்கள் இடம் பெற்று விட்டன.

ஆனால், தமிழ் மொழியில் உள்ள எழுத்துக்களையும் ஒலி களையும் பிறமொழியார் கடன் வாங்கிப் போற்றும் நிலை உள்ளதா எனின் அதுதான் இல்லை. இரு வேறு மொழியினர் கலந்து பழக நேர்ந்தால், சொற்களும் ஒலிகளும் கலத்தல் இயற்கை. ஆனால் ஒருமொழி கடன்வாங்க, மற்றொருமொழி கடன் வாங்காமல், அது பற்றிய கவலையே இல்லாமல் இருக்குமானால், அந்த மொழி பேசு வோரின் பெருமிதமே அதன் காரணம் என்று கூறவேண்டும். நூற்றைம்பது ஆண்டுகள் இங்கே ஆட்சி புரிந்த ஆங்கிலேயர் தமிழ்ச் சொற்கள் சிலவற்றையே கடன் வாங்கினர், தமிழ் ஒலியோ எழுத்தோ ஒன்றுமே. கடன் வாங்குவதில்லை. திருக் கழுக்குன்றத்தைத் திருக் கலுக் குன்றம் என்றே ஒலித்தனர்! எழுதினர். விழுப்புரத்தை வில்லு புரம் என்றே ஒலித்தனர்! எழுதினர். நாம் மட்டும், ஆக்ஸ் போர்ட், கேம்ப்ரிட்ஜ், ஹாஸ்

பிடல், ஹொடெல், ஷெல்லி, வோர்ட்ஸ் வொர்த் முதலான நூற்றுக்கணக்கான சொற்களை ஆங்கிலேயரைப் போலவே ஒலிக்க முயன்றோம்; எழுதக் கற்றோம். இதற்குக் காரணம் என்ன? ஆங்கிலேயரின் உயர்வு மனப்பான்மையும், தமிழரின் தாழ்ந்த மனப்பான்மையுமே காரணம் ஆகும். அவற்றிற்கு ஏற்ப ஆங்கிலேயர் ஆள்வோராகவும் தமிழர் ஆளப்படுவோராகவும் இருந்தனர். அன்றியும், ஆங்கிலம் அறிவுச் செல்வத்தைத் தரும் மொழியாகவும் தமிழ் அதைக் கைநீட்டிப் பெறும் மொழியாகவும் நின்றன. முன்னைய நிலை-ஆட்சி நிலை-மாறியது. ஆனால் பின்னைய நிலை-அறிவுச் செல்வத்தை வழங்கவும் பெறவும் இருந்த நிலை-மாறவில்லை, ஆகையால் உயர்வு தாழ்வு மனப்பான்மைகள் இன்னும் மாறவில்லை.

கொடுப்போரும் கொள்வோருமாக இருக்கும்போது மட்டும் இந்த நிலை இருந்துபோகட்டும். வழங்குவோன் வாயிலில் காத்திராமல், தன் மனையில் இருக்கும்போதும் அந்தப் பிச்சைக்கார மனப்பான்மை இருத்தல் வேண்டுமா? தமிழர் பிறமொழியாரின் சொற்களைக் கற்கும்போது பிற ஒலிகளைக் கடன் வாங்கி ஒலிக்கட்டும் (அதற்கும் இடமும் முறையும் அளவும் வரையறை செய்யப்படுதல் வேண்டும்). ஆனால் தமிழர் தமிழ்ச் சொற்களை ஒலிக்கும்போதும் எழுதும்போதும், அந்தத் தாழ்வு மனப்பான்மையையும் அறியாமையின் இளிவரவும் கொண்டிருத்தல் வருந்தத் தக்கதாக உள்ளது.

எடுத்துக்காட்டாக, உயர்த்தி என்ற தமிழ்ச்சொல், உசத்தி ஒசத்தி என்று திரிந்து, இன்று சில பகுதிகளில் ஒஸ்தி என்று ஒலிக்கப்படுகிறது; சிலரால் எழுதவும்படுகிறது. காட்சி மாட்சி என்ற தமிழ் சொற்கள் காக்ஷி மாக்ஷி என்று எழுதப்படுகின்றன. மஞ்சள் பிஞ்சு என்பவற்றை மஞ்ஜள் பிஞ்ஜு என்று கடிதங்களில் எழுதுவோரும் உள்ளனர். வேறு வழி இல்லாமல் சில இடங்களில் பொருள்களைக் கடன் வாங்கிய நிலை போய் தன் கை கால்களையும் கடன் வாங்கியவை என்று ஒருவன் எண்ணுவானானால் அவனை என்னென்பது?

இந்த மனப்பான்மை பல நூற்றாண்டுகளாகவே மெல்ல மெல்ல இடம்பெற்று வந்துள்ளது. அதனால்தான் தமிழுக்கே சிறப்பானது என்று பெருமை பாராட்டிக் கொள்ளும் ழகர ஒலி உடைய சொற்களையும் தமிழ் முறையில் ஒலிக்காமல், தமிழ்

அறியாத பிறர் ஒலித்த முறையிலேயே ஒலிக்கக் கற்றனர். பிறர் 'வாழைப் பழம்' என்று சொல்லத் தெரியாமல் 'வாளப் பளம்' என்றனர். அதையே பின்பற்றி நாகரிகம் என்று அவ்வாறே ஒலித்தனர் தமிழ் தெரிந்த தமிழரும். அதன் விளைவாக, இன்று ழகரத்தை நன்கு ஒலிக்கத் தெரியாத தமிழரே பெரும்பாலோர் என்னும் நிலைமை ஏற்பட்டுவிட்டது.

தமிழில் ர ற என்ற இருவேறு எழுத்துக்களும் அவற்றிற்கு உரிய வேறுபட்ட ஒலிகளும் உண்டு. அரம் : அறம், விரல் : விறல், அரிதல் : அறிதல், கரி : கறி, துர : துற என்னும் சொற்கள் எழுத்தால் வேறுபட்டிருத்தல் போலவே, சொல்லாலும் பொருளாலும் வேறுபட்டவை. ஆனால் அவற்றை இன்று வேறுபடுத்தி ஒலிப்பவரைக் காண்பது அரிது. தமிழர் பேச்சில் உள்ள ஒலிகளை ஆராய்ந்த ஐரோப்பிய மொழியியல் அறிஞர் சிலர், இன்று தம் ஆராய்ச்சியின் பயனாக, தமிழில் ர ற என்ற இரு வகை எழுத்துக்கள் இருந்தபோதிலும் ஒலியில் இரண்டிற்கும் வேறுபாடு இல்லை என்ற முடிவுக்கு வந்துள்ளனர் பழைய நெடுங்கணக்கின் எழுத்து இன்றைய தமிழில் இல்லை என்று கூறும் துணிவும் சிலர்க்கு உள்ளது.

ந ன என்ற இரண்டு எழுக்குக்களில் இன்று ந என்பதன் ஒலியை நன்கு ஒலிப்பவர் எத்தனை பேர்? நான் என்றும் நான்கு என்றும் எழுதியபோதிலும், னான் என்றும் னான்கு என்றுமே ஒலிக்கின்றனர்.

ழ ற ன இம் மூன்றும் தமிழுக்குரிய சிறப்பெழுத்துக்கள் என்று இலக்கண நூல்களில் படிக்கின்றோம். ஆனால் இவற்றின் நிலையே இன்று இவ்வாறு உள்ளது. இது வருந்தத் தக்கது.

—:o:—

போர் விரும்பாச் சமுதாயம்

பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்

தமிழர் என்றுமே ஒன்றி வாழவில்லை என்றும், அவர்தம் வாழ்வில் பல்வேறுபூசல்கள் இருந்தன என்றும் கூறி, அவர்தம் கூற்றுக்குச் சான்ருகப் பல புறநானூற்றுப் பாடல்களை எடுத்துக் காட்டுவர் சிலர். இன்றைய தமிழ்ச் சமுதாயத்தில் எத்தனையோ சிக்கல்களும் பூசல்களும் மாறுபாடுகளும் இருக்கின்றன என்பது உண்மைதான். சங்க காலத்திலும் அரசர் பலர் தம்முள் மாறு பட்டுப் போர் விளைத்தனர் என்பது ஓரளவு உண்மையே. இருந் தாலும் அத்தகைய போராட்டங்களுக்கு இடையே அமைதியும் பண்பும் இடையருது அமைந்து கிடக்கின்றன என்பது ஆராய் வாருக்கு நன்கு புலனுகும். பரந்த பாரத நாட்டின் பிற பகுதி களெல்லாம் வேற்றுமொழி, நாகரிகம், பண்பாடு இவைகளை ஏற்றுத் தலை தாழ்ந்து நிற்கின்ற அதே வேளையில், தமிழ்நாடு தன் மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றைப் பல்வேறு சூழல்களுக்கு இடையிலும் விட்டுக் கொடுக்காது அமைதியாக வாழ்வதுவே அந்நாட்டு மக்கள்தம் செம்மை வாழ்வை விளக்கிக் காட்டும். நாட்டில் பல்வேறுபட்ட கொள்கைகள் வளர்வதை இன்று பார்க்கின்ருேம். என்ருலும், அவற்ருல் சமுதாயத்தில் அடிப் படை வாழ்வு அழியாது அமைந்துள்ளது என்பதை அறிய முடிகின்றது. அது போன்றே, புறநானூறு போன்ற இலக்கியங் களால் அன்று நாட்டில் இடையருது போர்கள் நடைபெற் றனவோ என்று ஐயுறத்தக்க நிலை காணப்படினும், அவற்றுக் கிடையில் நாட்டு மக்கள் அமைதியாக வாழ்ந்தார்கள் என அறியமுடிகின்றது. அத்துடன் அவ்வாறு நடைபெற்ற போர் களும், நாட்டில் மாருட்டங்களை வளர்க்காது, கூடியவரையில் அமைதிகாணும் முறையில் படிப்படியாகச் சென்று, வேறு வழி யில்லையேல் போர் என்றும் அதுவும் நாட்டுக்குத் தொல்லைதாராத வழியில் நடப்பது என்றும், காணத்தக்க வகையிலேயே நடை பெற்றது என்றும் அறிகின்ருேம். இன்று உலகில் எங்கேனும் ஒரு சிறு பூசல் என்ருலும் உலகமெங்கணும் அதன் வாடை பல வகையில் வீசுவதைக் காண்கின்ருேம். ஆனுல் அன்று போர்

நடைபெற்ற அந்த நாட்டு எல்லையிலேயே மக்கள் அமைதியாக வாழ்ந்தார்கள் என அறிய முடிகின்றது. அதற்குக் காரணம் என்ன ? பண்டை மக்களது போர் முறையேதான். சேர்ந்து வாழ்வதே சிறந்த முறை என்று அவர்கள் உணர்ந்திருந்தார்கள். ஆனல் எதிர்பாராது போர் நேரின் அதைப் பரவ ஒட்டாது வரையறுத்த எல்லையில் முறை கெடாது நடத்தவும், கூடுமாயின் தடுக்கவும் முயன்றுர்கள். இந்த உண்மையை விளக்கும் புறப் பாடல்களும், புறத்திணை இயல் அமைப்புகளும் பலப்பல. அவற்றுள் ஒரு சிலவற்றை நுணுகி ஆராயின் தமிழ்நாட்டு மன்னரும், மக்களும் நாட்டை நலிவுறுத்தும் போரினை விரும்பாது அமைதி முறையில் மாறுபாடுகளைப் போக்கிக் கொள்ள முயன் றுர்கள் என்பது நன்கு விளங்கும்.

தமிழ்நாட்டில் போர்கள் பல நடந்தாலும் அப்போரின் முறையினையே நாம் இங்கு எண்ணிப் பார்க்கவேண்டும். ஒரு நாட்டு மன்னன் வேற்று நாட்டு மன்னனுடன் மாறுபட்டுச் சண்டை இடுவதையே போர் என்கிருேம். தனிமனிதர் சண்டை போராகாது. எனவே நாட்டுக்கு நாடு ஆற்றுவதே போர். அப் போரில் இரண்டு நாடுகள் ஈடுபடுவனவாயின், அவை இரண்டும் அமைதியில் வாழுமா ? வாழா என்று இன்றைய நிகழ்ச்சிகள் கூறுகின்றன. வாழலாம் என அன்றைய போர்முறை அறிவிக் கின்றது,

தமிழ் நாட்டுப் பழங்காலப் போர்முறை தனியானது. நாட்டோடு நாடு மாறுபட்டுப் போரிழைத்தாலும், அதில் நாட்டு மக்கள் அனைவரையும் புகுத்தாது. கூடியவரை தனிமுறையில் போர் ஆற்றி வெற்றி தோல்வி காண வழி செய்யும் முறை இருந்தது. அதிலும் எவ்வளவுக்கு எவ்வளவு போர் வளராமல் தடுக்க இயலும் என ஆராய்ந்து அதற்கேற்ற வழிகளையே அம் முறை ஆக்கித் தந்தமையையும் உணர்கின்ருேம். தொல்காப்பியம் என்ற பழம்பெரும் இலக்கண நூலும், பிற்கால இலக்கண இலக் கியங்களும் இந்த உண்மையை நன்கு வலியுறுத்துகின்றன. நாமும் அந்த வழியினை ஆராய்ந்து அமைவோம்.

ஒருநாட்டு மன்னன் மற்ருெரு நாட்டின்மேல் படையெடுக்க நினைத்தால், உடனே போர் என்று முரசம் கொட்டிப் போருக்குப் புறப்படமாட்டான். தொல்காப்பியப் புறத்திணை இயல், போர் முறையை வகுக்கின்றது. வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை என்ற நால்வகை மரபுகள் போர்களில் குறிக்கப் பெறுகின்றன.

முதலாவதாக அமைவது வெட்சி. அதனை விளக்கும் தொல் காப்பியர்

" வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந்து ஓம்பல் மேவற்றாகும்' (தொல். பொரு. 60)

எனக் காட்டுகின்றார். இதுவே போரைத் தடுக்கும் நல்ல வழி யாக அமைகின்றது. போர் நடைபெற வேண்டிய தேவை உண் டாயின், அப்போரின் முடிவை இந்த அடிப்படையிலே தீர்த்துக் கொள்ளலாமன்றோ! இதில் மாற்றாருடன் நேருக்கு நேர் போர் இல்லை. ஊர் எல்லைக்குள் மாருட்டமில்லை. ஊருக்கு வெளியிலே மேயும் மாற்றார் பசுக்களைக் களவின் வழி ஓட்டி வருவதுதான் வெற்றி தோல்வியை நிலைநாட்டும். அதில் காணும் முடிபினை நாட்டு வெற்றியாகவே கொள்வர் என நினைக்கலாம். அவ்வாறு மாற்றார் பசுக்களைக் கொண்டு வந்த பிறகு அவற்றைத் துன் புறுத்தாது காக்கவேண்டிய கடமையினைத்தான் தொல்காப்பியர், 'ஆதந்து ஓம்பல்' என்று அழகுபடக் காட்டுகின்றார். மற்றும் தமிழ்நாட்டுப் போர் முறையில் மாற்றார் நாட்டுப் பசுக்களும் காக்கப்படவேண்டும் என்ற உண்மையைப் புறநானூறு காட்டு கின்றது.

'ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டி ரும் பிணியுடை யரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வரைப் பெருக தீரும்
எம்அம்பு கடிவருதும் நும்அரண் சேர்மின் என
அறத்தாறு நுவலும் பூட்கை மறம்'' என்பது புறம். 9.

இத்தகைய பசுவைக் கொண்டுவந்து பாதுகாப்பதிலேயே அரசனுடைய வெற்றி அடங்கிவிடுகின்றது. அதைக் கொண்டுவர முடியாமல் மாற்று வேந்தன் எச்சரிக்கையாக இருந்து காப் பானுயின் வெற்றி அவன் பக்கம் நின்றுவிடுகின்றது. இனி இத் தொல்காப்பியச் சூத்திரத்தின் 'மேவற்றாகும்' என்ற தொடருக்கு உரை கூறவந்த நச்சினார்க்கினியர், ''மன்னுயிர் காக்கும் அன் புடை வேந்தர்க்கு மறத்துறையினும் அறமே நிகழும் என்றற்கு 'மேவற்றாகும்' என்றார்'' எனக் காட்டுவர். எனவே இந்த அற நெறியில் இருபெரு நாடுகள் போர்க்கொடுமைகளிலிருந்து காக்கப் படுகின்றன என்ற உண்மை நன்கு புலனாகும். 'பசு' அல்லது 'மாடு' நாட்டின் அடிப்படைச் செல்வமாக அன்று அமைந்திருந் தமையின், இதன் அடிப்படையிலேயே தமது வெற்றி

தோல்வியை மன்னர் நிலைநாட்டிக் கொண்டனர் என்பதும் ஒருசார் புலனுகுமன்றே !

இனி, இந்த அளவோடு அமையாது வேந்தருள் சிலர் மண்ணாசையால் மேலும் மேலும் போர் தொடுக்க நினைப்பாராயின், அவரைத் தடுக்கப் பல வழிகளை நல்ல மன்னர்கள் கையாண்டார்கள் என்பதைப் புறத்திணை இயல் நன்கு விளக்கிக் காட்டுகின்றது. வெட்சிக்கு அடுத்து 'வஞ்சி' என்னும் திணை, தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. அவ்வஞ்சியை விளக்க வந்த ஆசிரியர்

"எஞ்சா மண்ணசை வேந்தனை, வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித்தன்று"

(தொல். பொரு. 62)

எனக் காட்டுவர். இதற்கு உரையாசிரியர் பலவகையில் பொருள் கூறினர்கள் என்றாலும் வெளிப்படையாக, மண்ணாசை கொண்ட ஒரு வேந்தனை, மற்றொரு வேந்தன் அம்மாற்றான் அஞ்சுமாறு சென்று போர் செய்ய எண்ணுவதைக் குறித்தது எனத் தெரிகின்றது. எனவே இதுவும் போரன்று. அவ்வந்நாட்டு மக்கள் அஞ்ச வேண்டா நிலையிலே, மண்ணாசை கொண்ட மன்னன் அஞ்சத் தக்க வகையில் போருக்குப் புறப்படும் நிலையினைக் காட்டுவதே வஞ்சியாகும். 'வெட்சி'யால் பெற்ற வெற்றியால் மகிழாது, மேலும் மண்ணாசை கொண்டு திரியும் மன்னரும் சிலர் வாழ்ந்திருக்கக்கூடும். அவர் தம் அடல் கெடுப்பதற்கும் நாட்டில் அமைதி காப்பதற்குமே இவ் 'வஞ்சி' நிலை பயன்பட்டது என்பது தெளிவாகின்றது. "வட்கார் மேல் செல்லுதல் வஞ்சி" என்ற தொடரும் இவ்வுண்மையைக் குறிப்பாகக் காட்டுகின்றது. இதனால் மாற்று வேந்தர் தம் போரைத் தவிர்க்க வேண்டும் என்ற உண்மை உணர்த்தப் பெறுகின்றது. சிலர் "எதிர் ஊன்றல் காஞ்சி" என்ற இதற்கு மாறுபட்ட ஒன்றைக் கூறினாலும், தொல்காப்பியர் காஞ்சியை நிலையாமையை உணர்த்தப் பயன் படுத்துகின்றாரேயன்றி 'வஞ்சி'க்கு எதிராகப் பயன்படுத்த வில்லை. மேலும் இங்கே வஞ்சியின் நிலை மாற்று வேந்தனுக்கு அச்சுறுத்தப் பேயன்படுகின்றதே அன்றிப் போரின் தொடக்கமன்று. இது போரின் தடுப்பேயாகும். பின்னால் வரும் உழிஞையும், தும்பையும் போர்க்கு உரியன. எனவே, வெட்சி அமைதியாக நாட்டில் வெற்றியை நிலைநாட்டி வைக்க, "வஞ்சி" மண்ணாசை பிடித்த

வேந்தரை அச்சுறுத்தி, அதனல் போரைத் தவிர்த்து, நாட்டில் அமைதிகாணவே பயன்பட்டது.

இனி அடுத்து வரும் உழிஞைத்திணைக்குத் தொல்காப்பியர்

"முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்
பன்னெறி மரபிற் ருகும் என்ப" (தொல். பொரு. 65)

என விளக்குவர். இதனல் அடுத்த உண்மை விளக்கப் பெறுகின்றது. வஞ்சியால் அஞ்சாத மண்ணசை வேந்தர் மாறுபட்டுப் போர்தான் முடிவு என்று கூறுவாராயின், அப்போது அவர் தம் அரணத்தை-மதிலை-முற்றுகை இடுவதுதான் சிறந்த அறநெறியாக அமைகின்றது. அந்நெறி அறிஞர் காட்டிய நல்ல நெறியாகவும் அமைகின்றது. மாற்று நாட்டாரது அரணத்தை முற்றுகை இடுவதில் யாதும் பெரும் கொடுமைகள் நிகழா. சிறு சிறு இடையூறுகள் உண்டாகும் என்ருலும், அவற்ருல் நாட்டு மக்கள் பேரிடர்ப்படுவர் எனக் கொள்ள முடியாது. அன்றி அவ்வாறே இடர்ப்பட நேரினும் அது மண்ணசை வேந்தன் கொடுமையால் தவிர்க்க முடியாததாக அமைகின்றது. எனவே உழிஞை இன்றியமையாததாகின்றது. ஆயினும் அதிலும் சில படிகளைக் காட்டுகின்ருர் தொல்காப்பியர். உடனே படையெடுத்து மாற்ருர் அரணங்களை முற்றுகையிடின் பல தொல்லைகள் உண்டாகும். ஆகவே அவ்வாறு செய்யாது அதன் செயலைக் குறிப்பாக உணர்த்தவே குடைநாட்கோளையும், வாள் நாட்கோளையும் அமைத்தார்கள். அவற்றிற்கு வேறு காரணங்கள் காட்டப்பெறும். சற்று ஆய்ந்து எண்ணின் இந்த உண்மையே புலனகும். ஒரு வேந்தன் போருக்குப்புறப்பட சில நாள்களுக்கு முன் தன் வாளையும் குடையையும் போர் முழக்கத்துடன் புறவீடு செலுத்துவானயின், மாற்ருர் மண்ணசையினையும் போராசையினையும் மேற்கொள்ளுவார்களோ! கொள்ளார். ஆகவே அவற்ருல் போரைத்தவிர்த்தல் ஒரு வழியாம். அப்படியும் மாற்றவர் அமையவில்லையாயின் அவர் தம் அரணத்தை முற்றுகையிடுவதே வழியாகின்றது. அம்முற்றுகை உயிர்ச் சேதமின்றிப் பல நாள்கள் நடைபெறலாம். முடிவில் வெற்றி தோல்வி காணும் போதும் நாட்டில் குழப்பமோ சேதமோ இருக்காது. என்வே இப்படிக் கடைசிக் கட்டத்திலும் அமைதி வழியிலேயே வெற்றி தோல்வி காண்பது தமிழர் போர்முறை.

கடைசியாக இவற்றாலெல்லாம் நல்ல முடிவு இல்லையாயின் போரே முடிவு. ஆனால் அதிலும் பல புறநானூற்றுப் புலவர்கள் நல்ல வழிகளைக் கையாண்டுள்ளனர். போரைத் தடுக்கப் பல அறநெறி பற்றிய வழிகளைக் காட்டியுள்ளனர். அவ்வறநெறிகளைப் புறக்கணித்துப் போர்தொடங்க யாராவது நினைப்பார்களாயின் அவர்களை முன்னிறுத்தி, மாற்றார் நாடுகள் எந்தெந்த வழியில் அவதியுறும் எனக் காட்டி அக்கொடுமை வேண்டா என வற்புறுத்துவர். புறப்பாடல்களும் பல இந்த உண்மையினை விளக்க வருவனவே எனக் கொள்ளல் பொருந்தும். போர் வெறியினால் உடனே எண்ண முடியாவிடினும் அமைந்து நினைப்பானாயின் உண்மை உணர்வான் மன்னன். பின் போர் நிகழ வழியிருக்காது. அந்த நிலையெல்லாம் தாண்டி விலங்குணர்ச்சி மிகுமாயின் கடைசியில் போர்தான். எனவே போருக்கு உரிய தும்பையை இறுதியில் கூறிப் பாடுகின்றனர் தொல்காப்பியர். அதை விளங்கக் கூறுங்கால் இப்போர் நிகழ்ச்சி சிறப்பற்ற ஒன்று என்றே அவர் காட்டுகின்றார்.

> மைந்து பொருளாக வந்த வேந்தனை
> சென்று தலையழிக்கும் சிறப்பிற்றன் (தொல். பொரு. 70)

என்பது அவர் வாக்கு. இவ்வாறு தமிழ் நாட்டு மன்னர் போரை விரும்பாது வாழ்ந்தவர். இறுதியில் போர் வரினும் அது சிறப்பிற்று என உணர்ந்தனர். இப்போரின் வெற்றியையே பிறகு "வாகை"த்திணையால் விளக்கினர். பல புறப்பாடல்கள் வாகைத் திணையில் வந்துள்ளன. "அரசவாகை" எனப் பயில்கின்றோம். அவற்றுள் நாடு அழிவு முதலியன மிகைப்படுத்தியே காட்டப் பெறுகின்றன. இந்த உண்மையைத் தொல்காப்பியர்

> "நாவில் கொன்கைத் தத்தம் கூற்றைப்
> பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப" (தொல். பொரு. 76)

எனக் காட்டுவர். எனவே புறப்பாடல் கொண்டு தமிழ் வேந்தர் தம்முள் மாறுபட்டு மாற்றார் நாடுகளை அழித்தே காலங் கழித்தனர் எனக்கொள்வது பொருந்தாது என்பதும், அவர்கள் நாட்டில் போர் நிகழாதிருக்க என்னென்ன வகை உண்டோ அத்தனை முறைகளையும் கையாண்டார்கள். என்பதும், அப்படி உண்டாக நேரின் அதை நாட்டு அமைதி கெடாவகையில் அறத்தாறு நின்று நீக்கினர்கள் என்பதும் அறிந்து, தமிழ்ச் சமுதாயம் போரை விரும்பாத நல்ல சமுதாயம் என்பதை உணர்ந்து அதன் செயலைப் பயத்தல் வேண்டும் எனக் கூறி அமைகின்றேன். இன்று அச்சமுதாயத்தில் வாழும் நாமும் அந்தன்னெறி வழி வாழ்வோமாக.

சொல்லும் அதன் பொருளும்

தமிழ்த்துறைத் தலைவர்,
பூ. ஆலாலசுந்தரம், எம். ஏ.,
சென்னை கிறுத்தவக் கல்லூரி

(Semantics)

நாம் சொற்களின் மூலம் நம் கருத்தைப் பிறர்க்குத் தெரிவிக்கின்றோம். ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள் உண்டு. இதனையே ஆசிரியர் தொல்காப்பியனார்,

" எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே "[1]

என்ற நூற்பாவில் கூறியுள்ளார். இந்நூற்பாவிற்கு உரை கூறப் போந்த சேனாவரையர் " பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும் இடைச் சொல்லும் உரிச் சொல்லுமாகிய எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே, பொருள் குறியாது நில்லா என்றவாறு"[3] எனக் கூறியுள்ளது ஈண்டுச் சிந்திக்கத்தக்கது. நாம் சொற்றொடர்களை முன்னர் நினைந்து பின்னரே பேசத் தொடங்குகின்றோம் என்பர் மொழிநூலாசிரியர்[2]. சூழ்நிலை காரணமாகவும் இடம் பற்றியும் சொற்களின் பொருள் நன்றாக விளங்கப்படும். சொல் பொருளையும் விளக்கும் தன்னையும் விளக்கும் என்பது,

" பொருண்மை தெரிதலுஞ் சொன்மை தெரிதலும்
சொல்லி னாகும் என்மனார் புலவர் "[3]

என்ற நூற்பாவால் அறியலாகும். "சாத்தன் வந்தான், உறுகால் என்பனவற்றால் பொருள் உணரப்பட்டவாறும், "நீயென்கிளவி" " தஞ்சக்கிளவி " என்பனவற்றால் பொருள் உணரப்படாது. அச்சொல் தாமே உணரப்பட்டவாறும் கண்டுகொள்க " என்பர் சேனாவரையர். எடுத்துக்காட்டாக நிலம் என்ற சொல் நிலம் என்ற பொருளையும், நிலம் என்பது இன்ன சொல் என்பதையும் விளக்குதல் காண்க.

சொற்கள் பொருள் உணர்த்துவதில் இருவகை உண்டு. ஒன்று வெளிப்படையாகப் பொருளை உணர்த்துதல், மற்றொன்று குறிப்பு வகையால் பொருளை உணர்த்துதல். இதனை,

" தெரிபுவேறு நிலையலும் குறிப்பின் தோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே "[4]

---

1. தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - 152
2. We think in sentences - Language by Vendryers. p : 73
3. தொல் - சொல் - 156

எனத் தொல்காப்பியர் விளக்கியுள்ளார். 'அவன் வந்தான்' என்றதில் பொருள் வெளிப்படையாகத் தெரிகின்றது.

> "கல்லைக்கடிக்க நன்கு சமைத்தாய்" என்றபோது நன்முகச் சமைக்கவில்லை என்பது குறிப்பால் அறியலாகும்.
>
> "இளையதாக முள்மரங் கொல்க களையுநர்
> கைகொல்லும் காழ்த்த விடத்து"[5]

என்பது திருக்குறள். முள்ளையுடைய மரத்தைச் சிறியதாக இருக்கும்போதே வெட்டிவிடவேண்டும். முதிர்ந்தபோது அதை வெட்டினால் அது வெட்டுகிறவரின் கையை வருத்தும் என்பது இக்குறளின் வெளிப்படையான பொருள். இக்குறளால் பெறப் பெடும் குறிப்புப் பொருளும் உண்டு. "களையப்படும் பகையை அது மெலிதாய காலத்தே களைக அன்றியே வலிதாய காலத்துக் களையலுறின் தம்மை அது தான் களையும்" என்பது தோன்ற நின்றமையின் இதுபிறிது மொழிதலணியின் பாற்படும். உபமானத்தால் உபமேயத்தைப் பெறவைத்தல் பிறிது மொழிதலணியாம் எனவே சொற்கள் பொருள் உணர்த்தும்போது வெளிப்படையானும் குறிப்பானும் பொருள் உணர்த்தும் என்பது அறியக் கிடக்கின்றது. இதனையே நன்னூல் ஆசிரியர்.

"வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே"[6] எனக் கூறியுள்ளார். குறிப்புப் பொருள் வேறு பொருள் உணர்த்துவதாயினும் அது வெளிப்படைப் பொருளோடு தொடர்பு கொண்டதாகும் என்பர் மொழிநூல் வல்லார்[7].

சொல் பொருள் உணர்த்தும் முறையினை ஆராயும்போது பல உண்மைகள் வெளிப்படுகின்றன. அதாவது அவை உலகிலுள்ள பல மொழிகளுக்கும் பொதுவாக அமைகின்றன. இதனால் மக்கள் எல்லோரும் ஒரே முறையில் சிந்திக்கின்றார்கள் என்பது பெறப்படுகின்றது.[8] ஒரு சொல்லுக்குத் தொடக்கத்தில் இருந்த பொருளே என்றும் நிலைத்திருக்கும் என்று சொல்ல இயலாது. ஏனெனில் ஒரு சொல்லுக்குத் தொடக்கத்திலுள்ள

4. தொல் - சொல் - 157
5. குறள், பகைத்திறம் தெரிதல் - 6
6. நன்னூல் - பெயரியல் - 2
7. "The remarkable thing abtuo these variant meanings is our assurance and our agreement in viewing one of the meanings as normal (or Bentral) and the others as marginal (metaphoric are tran:ferred) Bloomfleld.

பொருள் பின் மாறவும் கூடும். எடுத்துக்காட்டாகப் பூ, மலர், என்ற சொற்கள் பொதுவாக எல்லாப் பூக்களையும் குறிப்பிட்டாலும் இலக்கியத்தில் பூ என்பது தாமரைப் பூவினையே குறிப்பதாகும். இதனைப்

"பூ வெனப்படுவது பொறி வாழ் பூவே"[9] என்பதும் "பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை"[10] என்பதும் வலியுறுத்தல் காண்க.

"சொற்களும் சொற்றொடர்களும் வாக்கியங்களும் சொல்லின் பாகங்களும் தத்தமக்குரிய பொருட் பெற்றி விரிந்தும் குறைந்தும், முற்றிலும் வேறுபட்டும் போகின்றன. பொதுவாகப் பல பொருள்களைக் குறித்து நின்ற சொற்கள் சிறப்பாகச் சிலவற்றையேனும் ஒன்றையேனும் குறிக்கும் நிலைமையை அடைகின்றன. இதனைப் "பொதுப் படை நியமம் என்னலாம்"[11] எனத் திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்கள் கூறியுள்ளனர்.

பல பொருளுக்கும் பொதுவாக வழங்கப்பட்ட ஒரு சொல். இப்போது ஒரு பொருளையே குறிப்பதைக் காண்கின்றோம். இவ்வாறு வருவதை மொழி நூலார் Restriction of words என்பர் இத்தொடரினை டாக்டர் மு. வரதராசனர் சிறப்புப் பொருட்பேறு என மொழி பெயர்த்துள்ளனர்[12]. எடுத்துக்காட்டாக நெய் என்ற சொல் முற்காலத்தில் பசுவின் நெய், வேப்ப நெய் எள்ளின் நெய் ஆமணக்கு நெய் முதலிய பலவற்றிற்கும் பொதுவான சொல்லாக அமைந்தது. ஆனல் தற்காலத்தில் நெய் என்ற சொல் பசுவின் நெய் எருமை நெய்களையே சிறப்பாகக் குறிக்கின்றது. இதைப் போலவே பொன் என்ற சொல் முற்காலத்தில் பொன், வெள்ளி,

---

8. "To pass now from the outer form of words to their inner meanlng, there is again so much that it is Common to all mankind in mental basis, in psychological Strucure, that we connot be surprised to find a number correspondencies betwen languages widely apart.

(Jesperson, Mankin, Nation and individual P. 212.)

9. நால்வர் நான்மணிமாலை - 40

10. தேவாரம் (அப்பர்) நமச்சிவாயத் திருப்பதிகாரம்.

11. தமிழ்மொழியின் வரலாறு - வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் பக்கம் - 37

12. மொழிநூல் - டாக்டர். மு. வரதராசனர் பக்கம். 330

செம்பு, இரும்பு முதலிய பல உலோகங்களுக்குப் பொதுவான பெயராக விளங்கியது. பொன் வெள்ளி செம்பு இரும்பு ஈயம்—இவைகளுக்கு ஐம் பொன் என்று பெயர். "தூண்டிற் பொன் மீன் விழுங்கியற்று"[13] என்ற வரியில் பொன் என்பது இரும்பால் செய்த கொக்கியினைக் குறிப்பது காண்க. இதனை டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் தமது நூலில் நன்கு விளக்கியுள்ளார். [14].

இவ்வாறே புல், இலை, முதலியன ஒரே பொருளைச் சிறப்பாக உணர்த்துவதைக் காண்க.

ஒரே பொருளுக்கு வழங்கிய பெயர் பின்னர் அதனோடு சேர்ந்த பல பொருள்களையும் குறிக்குமானல் அதனை பொதுப் பொருட்பேறு (Expansion of words) என்பர். முன்பு எள்நெய் ஒன்றையேகுறித்து வந்த எண்ணெய் என்ற சொல் தற்போது பிற நெய்களையும் குறிப்பிடுகின்றது. மண் எண்ணெய் தேங் காய் எண்ணெய், ஆமணக்கு எண்ணெய் என்ற வழக்குகளால் எண்ணெய் என்பது பொதுச் சொல்லாக மாறிவிட்டதைக் காண் கின்றோம். சுடர் என்ற சொல் சூரியனையும் நெருப்பையும் குறிப்பதாகும். ஒளியும் நெருப்போடு தொடர்பு கொண்டுள்ள தால் பின்பு சுடர் என்ற சொல் ஒளியையும் குறிப்பதாயிற்று. [15]

முன்பு உயர்ந்த பொருளை உணர்த்திய சொல் பின்னர் இழி பொருள் உணர்த்துமாகில் அதற்கு இழி பொருட் பேறு

---

13. திருக்குறள் 931.

14. In the world of metals the w·rd pon has undergose a restriction in signification which is indicative of tne sensce of valuse that prevaied in th ancient Tamil land.· Pon was originally a general term signifying metal. The specific metal referred to was left to be inferred from nhe context. Thus in the expressin tondil-pon the metal ofthe Fish-hook the world pon denotes iron. In some cases tbe metal was indicates by its distinctiᴀe colour or other qualities. Ven-pon whice metal, signifies silver. In coure of time the word pon come to be restricted to gold."

(Words and theirtsignificance by R. P. Sethu pillai P. 32)

15. "சுடர்க்கெலாம் நாயகமனையதோர் மாலை நல்கினுள்—கம்பர்-மந்தரை சூட்சிப்படலம்-52.

(Degradation of words) என்று பெயர். நாற்றம் என்ற சொல் முன்பு நல்ல நல மணத்தைக் குறித்தது.[16]. ஆனால் பிற்காலத்தில் நாற்றம் என்ற சொல் துர்நாற்றத்தைக் குறிப்பதாயிற்று[17]. இவ்வாறே காமம், முண்டை, குட்டி முதலிய சொற்கள் இழி பொருள் உணர்த்துவதைக் காண்க.

முற்காலத்தில் இழிபொருள் உணர்த்திய சொற்கள் இப்போது உயர் பொருள் உணர்த்துமானால் அவைகளை உயர்பொருட் பேறு (Elevation of words) என்பர் மொழி நூலாசிரியர். முன்பு களிப்பு என்ற சொல் கள்ளுண்டு களித்தலையே உணர்த்தியது.[18] "களித்தானைக் காரணம் காட்டுதல்" என்ற தொடருக்குக் கள்ளுண்டு களித்தான் ஒருவனை எனப் பரிமேலழகர் உரை கூறுதல் காண்க. ஆனால் தற்போது களிப்பு என்ற சொல் மகிழ்ச்சி என்ற உயர் பொருள் பெற்றுள்ளது.

கழகம் என்ற சொல் முற்காலத்தில் சூதாடுவோர் கூடும் இடத்திற்கு வழங்குவதாயிற்று. ஆனால் தற்போது கழகம் என்ற சொல் கல்வியாளர் நிறைந்த இடத்தைக் குறிப்பதாகும் "கலை தெரிகழகம்" என்ற கம்பர் வாக்கு ஈண்டு சித்திக்கத் தக்கது. பல கல்லூரிகளும் கலைகளும் நிறைந்த இடம் பல்கலைக் கழகமாகும்.

இதுகாறும் கூறியவற்றால் ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள் உண்டு என்பதும். சொல் குறிப்பானும் வெளிப்படையானும் பொருளை உணர்த்தும் என்பதும், முன்பு பல பொருளுக்குப் பொதுவாக வழங்கப்பட்ட சொல் இப்போது ஒரு பொருளையே குறிக்கும் என்பதும், முன்பு ஒரு பொருளைக் குறித்த சொல் பின்னால் அதைச் சார்ந்த பிற பொருள்களையும் குறிக்கும் என்பதும், முன்பு உயர்ந்த பொருளில் வழங்கிய சொல் தற்காலத்தில் இழிந்த பொருளை அடைந்துள்ளது என்பதும், முன்பு இழிந்த பொருளில் வழங்கிய சொல் பிற்காலத்தில் உயர்ந்த பொருளைக் குறித்துள்ளது என்பதும் பிறவும் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன.

இவைகளை மொழிநூல் துணைகொண்டு விரிவாகப் படித்துப் பயன் பெறுக.

---

16. பொன்னின் சோதி போதினின் நாற்றம். கம்பர்—மிதிலைக் காட்சி.

17. புன் புலால் நாற்றம் புறம்பொதிந்து மூடினும் சென்றுதைக்கும் சேயார் முகத்து—நீதிநெறி விளக்கம்-95.

18. "களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று"—குறள் 929.

பொருள் எணி

பன்மொழிப் புலவர்

கா. அப்பாதுரை M. A., L. T. (விசாரத்)

பொருள் என்ற தமிழ்ச் சொல்லை இன்று நாம் எத்தனையோ வகைகளில், எத்தனையோ கருத்துக்களைக் குறிக்க வழங்குகிறோம்.

புலன்களனைத்துக்கும் இலக்கான பிழம்புகள் பொருள் எனப் படுகின்றன. இவற்றுள் உயிருள்ளவையும் உண்டு; உயிரற்றவையும் உண்டு. கட்புலனாகாதவை, ஒவ்வொரு புலன்களுக்கு உணரப்படாதவை, சில புலன்களுக்கே உணரப்படுபவை ஆகியவையும் பொருள்களே. இங்ஙனம் காற்றும் நெருப்பும் பொருள்களே.

புற உலகில் இருப்பவை அனைத்தும் பொருள்களே. புற உலகில் இல்லாமல், புலன்களுக்குப் படாமல் கருத்துலகில் மட்டும் இருப்பவையும் பொருள்கள்தான். இங்ஙனம் வான், காலம், அளவு, அறிவு, ஆன்மா, கடவுள் ஆகியயாவும் பொருள்களே.

அறிவு நூல்களில் 'பொருள்' என்பது 'அறியப்படு பொருள்' என்றும் கருத்துப்பட வழங்கப் பெறுகிறது.

புலவர்கள் சொற்குறித்த கருத்து என்ற வகையில் இங்ஙனம் வழங்குகின்றனர்.

இவ்வளவு கருத்துக்களுமே இந்தச் சொல்லுக்கு அடிக்கடி குளறுபடி உண்டுபண்ணப் போதியவை. இவை போதாதென்று 'பணம்' என்ற கருத்துடனும் இது பெரிதளவில் வழங்குகிறது. பண ஆற்றல் பற்றிய நூலை நாம் 'பொருள் நூல்' என்கிறோம். இயற்கைப் பொருளெலாம் பொருளாதலால், இதனை 'இயல்நூல்' என்று பொருள் கொள்ளவும் கிடக்கின்றது எனலாம்.

செல்வப் பொருள், கல்விப் பொருள் என்ற வழக்கு நீதிநூல்களுக்குரியது.

திருவள்ளுவர் திருக்குறளிலும் பிற நீதி நூல்களிலும் பொருட்பால் என்று ஒரு பால் விளக்கம் பெறுகிறது. இதனைப் பலரும் 'செல்வம்' என்ற பொருளில்தான் கொள்கின்றனர். ஆனால் இப்பால் செல்வத்தைமட்டும் குறித்ததன்று. உண்மையில் செல்வம் பற்றிய பேச்சு அதில் மிகுதி வருவதேயில்லை. பெரும்பகுதி

அரசியலும், அரசியல் சார்ந்த சமுதாய, பண்பாட்டுச் செய்திகளும் இவை சார்ந்த நீதியுரைகளும் அறிவுரைகளும் அதில் காணப்படுகின்றன.

திருக்குறள் முதலிய ஏடுகளின் பாகுபாட்டுக்குரிய பொருள் என்பது அரசியல் சமுதாயப் பண்பாட்டுச் செய்திகள் என்றே பொருள் கொள்ளத்தக்கதோ என்று கருதவேண்டியிருக்கிறது.

உண்மையில் வாழ்க்கைக்குப் பொருளாவ தெல்லாம், அதாவது வாழ்பவர்க்கு அவ்வாழ்வுக்கு வேண்டிய கருவிகளாக அமைபவை எல்லாம் 'பொருள்' என்பதே திருவள்ளுவரின் 'பொருள்' ஆகும் என்னல்தகும்.

பொருளின் இத்தனை பொருளும் கடந்து, நாம் தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் சுட்டும் பொருளுக்கு வரவேண்டும்.

மேற்கூறிய பொருளின் பொருள்கள் அத்தனையையும் தொல்காப்பியர் கண்ணோட்டத்துடன் மறுசீர்ப்பட அலசி நோக்கினுல், தொல்காப்பியர் பொருளுக்குக் கொண்ட பொருளுடன் மேற்கண்டவற்றின் இருபொருள்கள் தொடர்புடையனவாகக் கருதத்தக்கன.

முதலது அறிவு நூற்கருத்தான அறியப்படு பொருள் என்பது.

இரண்டாவது திருவள்ளுவர் கருத்தாகிய வாழ்க்கையின் கருவிப் பொருள் என்பது.

தொல்காப்பியர் பொருளை அகம் என்றும், புறம் என்றும் வகுத்தார். இவ்விரண்டிலும் காதலும் போரும் இலக்கணத்தில் ஓரளவும் இலக்கியத்தில் பேரளவும் முனைப்பாக விரிக்கப்பட்டன. இது இயல்பே. ஆனல் தொல்காப்பியப் பொருள் இவற்றை மட்டும் குறிப்பதன்று. அகம் கருத்துலகு புறம் இயலுலகு. இந்த இரண்டிலும் அடங்காதன எவையும் இல்லை. எனவே தொல்காப்பியர் பொருள்' என்ற சொல்லில் குறிக்கொண்ட 'பொருள்' அறியப்படு பொருள் என்ற மிகப் பரந்த பொருளேயாகும்.

அகம், புறம் என்பன தொல்காப்பியரது 'பொரு'ளின் புடைப் பிரிவு (Vertical division) மட்டுமே 'அதற்கிடைப்பிரிவு (Horizontal division) 'பொருள்' பற்றிய தொல்காப்பியர் கருத்தகலத்தை இன்னும் தெளிவுபட விளக்கும். ஏனெனில் முதல், கரு, உரி என்ற அவரது மூன்றுகிடைப் பிரிவுகளுள், காதலும் போருமட்டுமல்ல, மனித வாழ்க்கை முழுவதும்'உரி' என்ற ஒன்றில் அடங்கிவிடும். முதல் என்பதிலும் குறுக்குப் பிரிவாகிய ஐந்திணைகளிலும் இயற்கை முழுவதுமே அடங்கும். கரு என்பதோ கிட்டத்தட்டத் திருவள்ளுவரின் 'பொருள்' கருத்தோடு ஒருபுடைத் தொடர்புடையது. ஏனெனில் அது வாழ்க்கைக்குக் கருவியான பொருள்களையே—கருவியான உயிர்ப் பொருள், உயி

ரில் பொருள், மனித சமுதாயம் வகுத்த கருவிப்பொருள்கள், கலைப் பொருள்கள் ஆகிய யாவும் அடக்கியது ஆகும்.

தொல்காப்பியப் 'பொருள்' இவ்வாறு 'பொருள்' என்ற சொல்லின் பரந்த பொது வழக்கிலும் எவ்வளவோ பரந்த கருத்து விரிவுடையது என்று காணலாம். ஆனால் சொல்லளவில் திருவள்ளுவரது 'பொருள்' இதன் ஒருபகுதியான கருப்பொருளுடன் தொடர்புடையதாய், அதுபோலத் தோன்றினாலும், உண்மையில் அதனினும் குறுகிய, ஆனால் உயர்ந்த பொருளுடையது.

உயிரினத்துக்கும் சமுதாயத்துக்கும் உரிய கருவிகள் யாவற்றையும் தொல்காப்பியர் கருப்பொருளுள் அடக்கினர். ஆனால் திருவள்ளுவர் இவற்றுள் என்றுமுள்ள இயற் பகுதியையும் நாகரிக மனித சமுதாயம் நிலையாகப் பெற்றுவிட்ட பொதுப் பகுதியையும் நீக்கி, அதாவது இயற்கையிலும் நாகரிகத்திலும் வளர்ந்துவிட்ட பகுதியை விலக்கிவிட்டு, வளரவேண்டிய வருங்கால மனித சமுதாயத்துக்கும் மனித இனத்திற்கும் உரியவளர்ச்சிக் கருவிகளையே 'பொருள்' என வகுத்தார். இதுவே உயரிய நல்லாட்சி, உயர்கல்வி முறை, உயர் பண்பாடு, இவை பேணும் உயர் குடிகள் ஆகிய பகுதிகளில் விரித்துரைக்கப்பட்டது.

இங்ஙனம் அகம் புறம் எனப் பாகுபடுத்தப்பட்ட தொல்காப்பியர் 'பொருள்' வேறு. அறம் பொருள் இன்பம் எனப் பாகுபடுத்தப்பட்ட திருவள்ளுவர் 'பொருள்'வேறு. பொதுவழக்காண 'பொருள்' என்ற சொல் வேறு. பொதுவழக்கு அச்சொல்லின் கருத்துக்குரிய அடித்தளம். அறிவு நூற் கருத்து அதற்குரிய உயர் பொருள் காண்பதற்கு ஏறிச்செல்ல வேண்டும் ஏணி. அதன் பல பொருள்களும் அதன் பல ஏணிப்படிகள். தொல்காப்பியர் பொருளும், திருவள்ளுவர் பொருளுமே ஏணிப் படிகளில் ஏறிச் சென்று காணவேண்டிய பரப்பில்மிக்க, உயர்விலமிக்க இருதமிழ்ப் பொருள்கள்.

தொல்காப்பியத்திலேயே, திருக்குறளிலேயே நாம் இருவர்க்குரிய பொருளையும் காணலாம். உண்மையில் இருவரிடமும் மூன்றாவது ஆகிய நம் பொதுப்பொருளும் உண்டு.

அகம் புறம் என்பதுதான் தமிழர் பாகுபாடு என்றும் அறம் பொருள் இன்பம் தமிழர்க் குரித்தல்லாத பிற்காலப் பாகுபாடு என்றும் சிலர் புனைந்து கூறுவர். அதற்கு ஆதாரமில்லை என்பது மட்டுமன்று. இரண்டு கருத்துக்களும் தமிழர் சிந்தனைப்பட்டறையிலேயே அடித்துருவாக்கப்பட்டவை என்பதை மேற்காட்டிய விளக்கம் தெளிவுபடுத்தும். ஏனென்றால் இரண்டுக்கும் அடிப்படையான மூன்றும் பொருளும், அறிவுக்கருத்தாகிய பொருள் ஏணியும், படிகளும் போலும் 'பொருள்' என்ற ஒரே இன வரலாற்றில் சொல்லாக அமைந்தது தமிழ் மொழி ஒன்றிலேயே பியாகும். றமொழிகளில் ஒவ்வொரு படிக்குரிய பொருளே ஒரு சொல்லாகக் காணப்படுகின்றது.